www.kalvinesan.com
https://t.me/kalvinesan

2022-23 EDITION

SURA'S 12TH STD SCHOOL GUIDES

Updated New Edition




Call @
9600175757
8124301000
orders@surabooks.com

Buy Online @ surabooks.com

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

சுராவின்

# வணிகவியல்

## 12ஆம் வகுப்பு

**புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

### சிறப்பம்சங்கள் :

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
  1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
  2. பொருத்துதல்
  3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
  4. பொருந்தாததை கண்டறிதல்
  5. கூற்று மற்றும் காரணம்
  6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் – 2019 *[Govt. MQP-2019]*, காலாண்டுத் தேர்வு – 2019 *[QY-2019]*, அரையாண்டுத் தேர்வு – 2019 *[HY-2019]*, பொதுத்தேர்வு மார்ச் – 2020 *[Mar-2020]* மற்றும் அரசு துணைத்தேர்வு செப். 2020 & ஆகஸ்ட் 2021 *[Sep-2020 & Aug-2021]* வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 6 வரை (*PTA*) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு துணைத்தேர்வு ஆகஸ்ட் 2021 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

**2022-23 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**ISBN : 978-93-92559-67-9**
குறியீட்டு எண். **SG 118**

**எழுதி வழங்கியவர்**
**திரு. ப. ஏகாம்பரம்,** M.Com., M.Phil., MBA. மதுரை
**திரு. க. ராஜசேகர்,** M.Com., M.Phil., MBA. நாமக்கல்
**திருமதி. ப. மதிவதனி,** M.Com., M.Phil., MBA. சென்னை

**திருத்தியவர்**
**திரு. அ. மணிமாறன்,** M.Com., M.Phil., சென்னை

**மதிப்பாளர்**
**முனைவர். வ. முருகன்,** M.Com., M.Phil., MBA.
துறைத்தலைவர், திருச்சி

**Also available for Std - XI, XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர்,
சென்னை-600 040.
**Phones** : 044-4862 9977, 4862 7755
**Mobile** : 81242 01000 / 81243 01000
**Whatsapp** : 81242 01000 / 98409 26027
**e-mail** : orders@surabooks.com
**website** : www.surabooks.com

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
ஆன்லைன் வலைதளம் : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

12ம் வகுப்பிற்கான சுராவின் **வணிகவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். வணிகவியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் வணிகவியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் வணிகவியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், வணிகவியல் பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

***வாழ்த்துக்கள் !!!***


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


## அலகு 1 - மேலாண்மைச் செயல்முறைகள்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் -1 | மேலாண்மைத் தத்துவங்கள் | 1-10 |
| அத்தியாயம் - 2 | மேலாண்மை செயல்பாடுகள் | 11-18 |
| அத்தியாயம் - 3 | குறியிலக்கு மேலாண்மை மற்றும் விதிவிலக்கு மேலாண்மை | 19-25 |

## அலகு 2 - நிதிச் சந்தை - I

| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 4 | நிதிச் சந்தை - ஓர் அறிமுகம் | 26-35 |
| அத்தியாயம் - 5 | மூலதனச் சந்தை | 36-46 |
| அத்தியாயம் - 6 | பணச் சந்தை | 47-57 |

## அலகு 3 - நிதிச் சந்தை - II

| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 7 | பங்கு மாற்றகம் | 58-70 |
| அத்தியாயம் - 8 | இந்தியப் பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியம் (செபி) | 71-78 |

## அலகு 4 - மனித வள மேலாண்மை

| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 9 | மனித வள மேம்பாட்டின் அடிப்படைகள் | 79-86 |
| அத்தியாயம் - 10 | ஆட்சேர்ப்பு முறைகள் | 87-95 |
| அத்தியாயம் - 11 | பணியாளர் தேர்ந்தெடுத்தல் | 96-106 |
| அத்தியாயம் - 12 | பணியாளர் பயிற்சி முறை | 107-115 |

## அலகு 5 - சந்தையிடுகையின் அடிப்படை கூறுகள்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 13 | சந்தை மற்றும் சந்தையிடுகையாளர் | 116-124 |
| அத்தியாயம் - 14 | சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை | 125-131 |
| அத்தியாயம் - 15 | சந்தையிடுதல் நவீன போக்கு | 132-138 |



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


**அலகு 6 - நுகர்வோர் பாதுகாப்பு**

| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 16** | நுகர்வோரியல் | 139-148 |
| **அத்தியாயம் - 17** | நுகர்வோரின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் | 149-154 |
| **அத்தியாயம் - 18** | குறை தீர்ப்பு செயல்முறை | 155-163 |

**அலகு 7 - வாணிபச் சூழல்**

| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 19** | சுற்றுச் சூழல் காரணிகள் | 164-172 |
| **அத்தியாயம் - 20** | தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் | 173-182 |

**அலகு 8 - சரக்கு விற்பனைச் சட்டம் 1930 & மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881**

| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 21** | சரக்கு விற்பனைச் சட்டம் 1930 | 183-191 |
| **அத்தியாயம் - 22** | மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 | 192-204 |

**அலகு 9 - தொழில் முனைவு மேம்பாடு**

| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 23** | தொழில் முனைவுக்கான அடிப்படைக் கூறுகள் | 205-214 |
| **அத்தியாயம் - 24** | தொழில் முனைவோர்களின் வகைகள் | 215-223 |
| **அத்தியாயம் - 25** | தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள் | 224-233 |

**அலகு 10 - நிறுவனம் சட்டம் மற்றும் செயலர் நடைமுறைகள்**

| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 26** | நிறுமச் சட்டம், 2013 | 234-246 |
| **அத்தியாயம் - 27** | நிறும மேலாண்மை | 247-258 |
| **அத்தியாயம் - 28** | நிறுமச் செயலர் | 259-268 |
| | அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2021 விடைகளுடன் | 269-282 |



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 1 மேலாண்மைச் செயல்முறைகள்

# 1 அத்தியாயம் மேலாண்மைத் தத்துவங்கள்

## பொருளடக்கம்


1.1. மேலாண்மையின் அடிப்படைக் கருத்து
1.2. மேலாண்மையின் வரைவிலக்கணம்
1.3. மேலாண்மை Vs நிர்வாகம்
1.4. மேலாண்மைச் செயல்முறைகள்
1.5. அறிவியல் பூர்வ மேலாண்மைக் கோட்பாடுகள்
1.6. நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்
1.7. மேலாண்மையின் வீச்செல்லை


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. மேலாண்மை என்பது ---------- ன் செயல் ஆகும்.**

அ) மேலாளர் *[QY-2019; PTA-1]*
ஆ) கீழ்ப்பணியாளர்
இ) மேற்பார்வையாளர்
ஈ) உயரதிகாரி

**[விடை: அ) மேலாளர்]**

**2. மேலாண்மை என்பது ஒரு ---------**

அ) கலை *[Govt. MQP-2019; PTA-1; Aug-2021]*
ஆ) அறிவியல்
இ) கலை மற்றும் அறிவியல்
ஈ) கலை அல்லது அறிவியல்

**[விடை: இ) கலை மற்றும் அறிவியல்]**

**3. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்**

*[QY-2019; PTA-2; Aug-2021]*

அ) ஃபோயல் ஆ) டேலர்
இ) மேயோ ஈ) ஜேக்கப்

**[விடை: ஆ) டேலர்]**

**4. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ------------- என்பர்.** *[Sep-2020]*

அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு
இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

**[விடை: இ) வேலைப்பகிர்வு]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com https://t.me/kalvinesan
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**5. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு ---------- *[PTA-6]***

அ) அதிகம் ஆ) குறைவு
இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

**[விடை: ஆ) குறைவு]**

## II. குறு வினாக்கள்

**1. மேலாண்மை என்றால் என்ன? *[QY-2019; PTA-1]***

ஒரு வணிக நிறுவனத்தின் மேலாண்மை செய்பவர்கள் மற்றும் விசயங்களை நிர்வகிப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வழி மேலாண்மை என்று அழைக்கப்படுகின்றது.

**2. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக. *[HY-2019; Mar-2020]***

(i) கணக்கியல்
(ii) வணிகச் சட்டங்கள்
(iii) உளவியல்
(iv) புள்ளியியல்
(v) பொருளியல்
(vi) தரவு செயலாக்கம் போன்றவை மேலாண்மைக் கருவிகளாகும்.

**3. அதிகாரம் என்பதன் பொருள் தருக. *[PTA-3; Sep-2020]***

அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

**4. மேற்பார்வை வீச்செல்லை என்பதன் பொருள் யாது? *[PTA-2]***

ஒரு உயர் அலுவலரால் திறமையாக மேலாண்மை செய்யப்படும் கீழ்ப்பணியாளர் களின் எண்ணிக்கையை மேலாண்மையின் வீச்செல்லையை குறிக்கின்றது மேலாண்மை யின் பரப்பளவு என்பது மேலாளரின் கீழ் நேரடியாகப் பணியாற்றும் கீழ்பணியாளர்களின் அளவு ஆகும்.

## III. சிறு வினாக்கள்

**1. மேலாண்மை வரைவிலக்கணம் தருக. *[PTA-1, Aug-2021]***

(i) ஹென்றி ஃபோயல் என்பவரின் கூற்றுப்படி, “மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது.”

(ii) பீட்டா F. டிரக்கர் என்பவரின் கூற்றுப்படி, மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது.

---

**2. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)**

***[Govt. MQP-2019; HY-2019; PTA-2]***

| வ.எண் | ஒப்பீட்டின் அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|---|
| (i) | பொருள் | ஒரு வணிக நிறுவனத்தின் மேலாண்மை செய்பவர்கள் மற்றும் விசயங்களை நிர்வகிப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வழி என்று அழைக்கப்படுகின்றது. | ஒரு குழுவால் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான செயல் முறையே நிர்வாகம் என்று அழைக்கப்படுகின்றது. |
| (ii) | அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர் மட்ட அளவில் |
| (iii) | பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| (iv) | தொடர்பு தன்மை | கொள்கைகளை செயல்படுத்தல் | கொள்கைகளை உருவாக்குதல் |
| (v) | செயல்பாட்டு பரப்பு | நிர்வாகத்தின் கீழ் செயல்படுகிறது. | நிறுவனத்தின் செயல்பாடுகள் மீது முழுக் கட்டுப்பாடு |
| (vi) | செயல் | திட்டங்களையும், கொள்கைகளையும் செயல்படுத்தல் | திட்டங்கள் தீட்டுதல், கொள்கைகளைக் கட்டமைத்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல். |



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**3. டெய்லரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?** *[QY-2019; Sep-2020]*

திரு.டேலர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள்.

(i) அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல.

(ii) இணக்கம், சச்சரவின்மை.

(iii) மனப்புரட்சி.

(iv) தனிமனிதத் தத்துவம் அல்ல , ஒத்துழைப்பு.

(v) ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி.

**4. மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?**

(i) மேலாண்மையின் வீச்செல்லையானது பரந்த மற்றும் குறுகிய தன்மை உடையது.

(ii) பரந்த அளவுள்ள மேலாண்மைப் பரப்பில் குறைவான அதிகாரப் படிநிலை மட்டங்கள் இருக்கும்.

(iii) தொழிலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பு என்பது பெயரளவில் இருக்கும்.

(iv) அது போலவே குறுகிய மேலாண்மைப் பரப்பில் அதிகாரப் படிநிலை மட்டங்கள் மிகுந்து இருக்கும்.

(v) அமைப்பின் கூட்டமைப்பு உயரமாக இருக்கும்.

## IV. பெரு வினாக்கள்

**1. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி. (ஏதேனும் 5)**

**மேலாண்மையின் அடிப்படைக் கருத்து:** மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை பின்வரும் அவற்றின் தொன்றுதொட்ட இயல்புகள் மூலமாக அறிந்து கொள்ள இயலும்.

(i) **அறிவின் தொகுப்பு :** தற்போது மேலாண்மை உயர்தனிச் சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது. மேலாண்மை இலக்கியம் அனைத்து நாடுகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

(ii) **மேலாண்மைக் கருவிகள் :** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியல், தரவு செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பல்கிப் பெருகி விரிவடைந்துள்ளது.

(iii) **தனிப் பாடப்பிரிவு :** பல்வேறு பல்கலைக் கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாக அங்கீகரித்திருக்கின்றன. ஏற்றுமதி மேலாண்மை, ஆள்சார் மேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, சந்தை மேலாண்மை, நிதி மேலாண்மை போன்ற மேலாண்மையின் பல்வேறு பகுதிகளில் கருத்தரங்கம், சிறப்புப் பாடப் பிரிவுகள், பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மேலாண்மை நவீனமயமானதாகவும், பிரபலமடைந்தும் வருகின்றது.

(iv) **சிறப்பீடுபாடு:** வணிகத்தின் ஒவ்வொரு செயல்பாட்டுப் பகுதியையும் சீரிய முறையில் மேலாண்மை செய்து வணிகத்தை சிறப்பாக நிர்வகிக்க உயர் கல்வித் தகுதியும், முறையான பயிற்சியும் பெற்ற உரிய முன்னனுபவமுள்ளவர்களை தேர்ந்தெடுத்து பணியமர்த்த வேண்டும் என்ற மனப்பாங்கு தற்போது வளர்ந்து வருகின்றது.

(v) **நடத்தை விதி:** வணிக மேலாண்மை என்பது நுகர்வோர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் அல்லது சமுதாயம் போன்றவற்றிற்கு வணிக மேலாண்மை ஆற்ற வேண்டிய சமூகப் பொறுப்புணர்வுகளை அறிவூட்டப்பட்ட வணிகர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். பொது கழகங்களுக்கு தற்போது சமூக மனசாட்சியும், விழிப்புணர்வும் உள்ளது.

(vi) **பணி ரீதியானதொரு அமைப்பு:** பல்வேறு நாடுகளில் மேலாண்மைப் பிரிவுகளில் அறிவுப் பரவலாக்கம் ஏற்படவும், மேலாண்மை சிறப்புத் தொழில் குறித்த பொதுமக்கள் மனதில் ஒரு சிறந்த தோற்றத்தை உருவாக்கவும் வணிக மேலாண்மை சங்கங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை நாம் காண முடிகின்றது.

**2. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)** *[Govt. MQP-2019; QY-2019; PTA-2]*

**நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்:** நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படும் திரு.ஹென்றி போயல் ஒவ்வொரு மேலாளரும் நிறுவனத்தின் வெற்றிக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய 14 பிரதான கோட்பாடுகளை வரையறுத்திருக்கிறார். அவைகளாவன.

(i) **வேலைப் பகிர்வு :** இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும். தொழிலாளர் ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில் முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்க வேண்டும்.

(ii) **அதிகாரமும், பொறுப்பும்:** அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

மேலாண்மைத் தத்துவங்கள்

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



(iii) **ஒழுங்குமுறை :** இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும். இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

(iv) **பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்.** நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும். எனவே தனிப்பட்ட நபர்களின் தனிநலனை விட தொழில் நிறுவனத்தின் நோக்கமே அனைத்தையும் விட மேம்பட்டிருக்க வேண்டும்.

(v) **ஊதியம் :** ஊதியம் என்பது பணியாளர் களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். பணியாளருக்கு கொடுக்கப்படும் ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மையான ஊக்குவிப்பவனாக இருந்து உற்பத்தியை அதிகரிப்பப்பதால் அவர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

## PTA வினாக்கள்

### 3 மதிப்பெண்கள்

**1. மேலாண்மை கலையா? அறிவியலா?** *[PTA-2]*

**மேலாண்மை அறிவியல் :**

மேலாண்மை என்பது ஒரு நுட்பமான அறிவியலாகும். ஏனெனில் அறிவியலில் கொள்கைகளை அல்லது தத்துவங்களை ஒரு ஆய்வகத்தில் பரிசோதித்து அவற்றை மிகச் சரியாகவும், நுட்பமாகவும் நிரூபிக்கலாம் அல்லது நிரூபிக்க இயலாமல் போகலாம்.

**மேலாண்மை கலை :**

மேலாண்மையில் மேலாளரின் முடிவெடுக்கும் திறன் மேலாண்மைக் கலையை பிரதிபலிக்கின்றது. கணினி மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் கூட தீர்மானிக்கும் திறன் மற்றும் கற்பனைத் திறன் மிக அவசியம். முடிவெடுக்கும் திறனில் ஒரு சிறப்புத்திறன் மேலாளருக்குப் பதிலி ஆகாது.

**மேலாண்மை அறிவியலா? கலையா? :**

நிறைவாக மேலாண்மை என்பது ஒரு கலையும் அல்ல, அறிவியலும் அல்ல, இரண்டின் தொகுப்பாகும். ஆனால் அறிவியல் பூர்வமாக மேலாண்மைக் கோட்பாடுகளையும், மேலாண்மைத் திறன்களையும் வெளிப்படுத்தி போட்டி நிறைந்த தொழில் வணிக உலகில் நிறுவனத்தின் இலக்குகளை இயன்றவரை நிறைவேற்றுதல் ஆகும்.

### 5 மதிப்பெண்கள்

**1. அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள் யாவை?** *[PTA-1]*

திரு.டேலர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள்.

(i) **அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல:** கட்டை விரல் விதி என்பது மேலாளர் தனது தனிப்பட்ட தீர்ப்புகள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவு ஆகும். டேலரின் கருத்துப்படி, இரும்புத் தகடுகளை பாக்ஸ் கார்களில் ஏற்றுவது போன்ற சாதாரண சிறிய உற்பத்தி நடவடிக்கைகளைக் கூட அறிவியல் பூர்வமாக திட்டமிட இயலும். இது மனித திறனையும், நேரத்தையும் சேமிக்க உதவும்.

(ii) **இணக்கம், சச்சரவின்மை :** மேலாண்மைக்கும், பணியாளர்களுக்கும் மிகச்சிறந்த ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை டேலர் வலியுறுத்துகிறார். மேலாண்மைக்கும், பணி யாளருக்கும் இடையே முரண்பாடு ஏற்படும் போது அதன் மூலம் மேலாண்மையோ அல்லது பணியாளர்களோ ஆதாயம் அடைந்துவிடக்கூடாது. மேலாண்மையும், பணியாளர்களும் மற்றவரின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

(iii) **மனப்புரட்சி :** நிர்வாகம், பணியாளர்கள் இவ்விருவருக்கும் மற்றவர் மீதான மனப்பாங்கும், கண்ணோட்டமும் முற்றாக மாற வேண்டும். ஒவ்வொரு முதலாளியும் தனது செழிப்பை தனது பணியாளர்களின் செழிப்பு மூலமே அடைய எய்த முடியும் என்பதை எப்போதும் மனதில் இருத்த வேண்டும். இது

அ. இலாப உபரியை பணியாளர்களோடு பகிர்ந்து கொள்ளல்

ஆ. பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

இ. வேலைப் பகிர்வு

ஈ. ஒற்றுமை உணர்வு

உ நேர்மறை மனநிலை

ஊ. ஒழுங்குணர்வு

எ. நேர்மை

போன்றவற்றின் மூலமே சாத்தியம். நிர்வாகம் தனது உபரியான இலாபத்தை தனது பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ள எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

(iv) **தனி மனிதத்துவம் அல்ல, ஒத்துழைப்பு:** இக்கோட்பாடு, சச்சரவு இன்றி ஒற்றுமை என்ற கோட்பாட்டின் விரிவாக்கம் ஆகும். இக்கோட்பாடு தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தின் பரஸ்பர ஒத்துழைப்பின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ண உணர்வு ஆகியவை மேலாளர் மற்றும் தொழிலாளர் ஆகிய இருவரிடமும் மேலோங்கி இருக்க வேண்டும். இதன் உள்நோக்கம் என்பது அகப் போட்டிகளை ஒத்துழைப்பாக மாற்றுவது ஆகும். நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எப்போதும் வழிகாட்டி ஊக்குவிக்க வேண்டும்.

(v) **ஒவ்வொரு நபரும் அவரது மிகச் சிறந்த திறனுடனும் செழிப்புடனும் வளர்ச்சியடைதல்:** எந்த ஒரு தொழிலமைப்பின் திறனும் அதன் தொழிலாளர்களின் திறமைகளையும் திறன்களையுமே பெருமளவு சார்ந்துள்ளது. விஞ்ஞான அணுகுமுறை மூலம் உருவாக்கப்பட்ட சிறந்த உற்பத்தி முறைகளை அறிந்து கொள்ள தொழிலாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல் மிக அவசியத் தேவையாகும்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

1. **நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படுபவர் _______** *[HY-2019]*

அ) திரு. F.W. டேலர்

ஆ) திரு. ஹென்றிஃபோயல்

இ) திரு. பீட்டர் F. டிரக்கர்

ஈ) திரு. லூயிஸ் A ஆலன்

**[விடை: ஆ) திரு. ஹென்றிஃபோயல்]**

2. **"மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது" என்று கூறியவர் :** *[Mar-2020]*

அ) ஜார்ஜ் ஒடியோர்ன்

ஆ) ஹென்றி ஃபோயல்

இ) பீட்டர் F. டிரக்கர்

ஈ) F.W. டேலர்

**[விடை: இ) பீட்டர் F. டிரக்கர்]**

3. **கூற்று (கூ) : மேலாண்மை அறிவு என்பது வேலை வாய்ப்பு உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கான கடவுச்சீட்டு.**

**காரணம் (கா) : மேலாண்மை இலக்கியம் அனைத்து நாடுகளிலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது.** *[Sep-2020]*

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணம் என்பது கூற்றுக்கு சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

ஈ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

**[விடை: அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்]**

### 5 மதிப்பெண்கள்

1. **மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?** *[QY-2019]*

(i) பீட்டா F. டிரக்கரின் கூற்றுப்படி, மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும், மேலாண்மை செய்கிறது.

(ii) பீட்டர் டிரக்கர் தனது வரைவிலக்கணத்தில் மேலாண்மையின் மூன்று பணிகளை முக்கியத்துவம் (அ) அழுத்தம் தந்துள்ளார். அவைகளாவன:

- வணிகத்தை மேலாண்மை செய்தல்
- மேலாளரை மேலாண்மை செய்தல்
- பணியாளர்களையும், பணியையும் மேலாண்மை செய்தல்

(iii) இதில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும், எவ்வித செயலையும் மேலாண்மை செய்ய இயலாது, மேலும் வணிக நிறுவனத்தையோ அல்லது தொழில் சமூகத்தையோ நிர்வகிக்க இயலாது.

(iv) பீட்டர் டிரக்கர் என்பவர் கூற்றுப்படி ஒரு மேலாளர் மேற்கூறிய மூன்றையும் திறமையாக சமன் செய்து, ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.

(v) எனவே ஒவ்வொரு வணிகத்திலும் அதன் மேலாளர் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவராகவும், வியாபாரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் செயல்படுகிறார்கள். திறம்பட்ட, செம்மையான மேலாண்மை இல்லாமல், மனித வளங்களையும், பொருட்களையும், நிதி வளங்களையும், திறமையாக ஒதுக்கீடு செய்யவும் மற்றும் முழுமையாகப் பயன்படுத்தவும் இயலாது.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 2 நிதிச் சந்தை – I

# 4 அத்தியாயம் நிதிச் சந்தை – ஓர் அறிமுகம்

## பொருளடக்கம்


4.1. நிதிச் சந்தையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

4.2. இந்திய நிதி சந்தையின் எல்லை

4.3. நிதிச் சந்தைகளின் வகைகள்

4.4. நிதிச் சந்தையின் பங்கு

4.5. நிதிச் சந்தையின் பணிகள்

4.6. புதிய வெளியிடுகள் சந்தை Vs இரண்டாம் நிலை சந்தை


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு ________ உதவுகிறது.** *[PTA-3]*

அ) நிதிகளை திரட்டுவதற்கு

ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு

இ) விற்பனையை அதிகரிப்பதற்கு

ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

**[விடை: அ) நிதிகளை திரட்டுவதற்கு]**

**2. மூலதனச் சந்தை என்பது ______ க்கான ஒரு சந்தை ஆகும்.**

*[Govt. MQP-2019; QY-2019; PTA-4; Sep-2020]*

அ) குறுகிய கால நிதி

ஆ) நடுத்தர கால நிதி

இ) நீண்ட கால நிதி

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**[விடை: இ) நீண்ட கால நிதி]**

**3. முதல் நிலைச் சந்தை ________ எனவும் அழைக்கப்படுகிறது.** *[PTA-5]*

அ) இரண்டாம் நிலைச் சந்தை

ஆ) பணச் சந்தை

இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை

ஈ) மறைமுக சந்தை

**[விடை: இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**4. உடனடிச் சந்தை என்பது நிதிக் கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் ______ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்.** *[PTA-1]*

அ) உடனடியாக

ஆ) எதிர்காலத்தில்

இ) நிலையானது

ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

**[விடை: அ) உடனடியாக]**

**5. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்** *[PTA-4, 6; Aug-2021]*

அ) ஒரே ஒரு முறை

ஆ) இரண்டு முறை

இ) மூன்று முறை

ஈ) பல முறை

**[விடை: ஈ) பல முறை]**

## II. குறு வினாக்கள்

**1. அமைப்பு நிறுவனங்களின் கூறுகள் யாவை?**

அமைப்பு நிறுவனங்கள் கட்டுப்பாட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், நிதிச் சந்தைகள் மற்றும் நிதிச்சேவைகளைக் கொண்டுள்ளது.

**2. உடனடிச் சந்தை என்றால் என்ன?**

ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். அதாவது தீர்வு உடனடியாக நடைபெறுகிறது.

**3. கடன் சந்தை என்றால் என்ன?**

கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சந்தை ஆகும். அரசு பத்திரங்கள் (அ) பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள் போன்றன.

**4. இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?** *[Aug-2021]*

வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் கலந்துரையாடுதல் மூலம் நிதி சார்ந்த சொத்துக்களின் விலையை நிர்ணயம் செய்ய நிதிச் சந்தை அனுமதிக்கின்றது. விலை கண்டுபிடிப்பு செயல்முறை மூலம் தேவை மற்றும் அளிப்பு அடிப்படையில் பொருளாதாரத்தில் நிதிகளை பங்கீடு செய்வதற்கு நிதிச் சந்தை சைகை வழங்குகிறது.

## III. சிறு வினாக்கள்

**1. நிதிச் சந்தையின் பொருள் தருக.**

(i) எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துக்கள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகள் வியாபாரம் செய்யப்படுகின்றதோ அதுவே 'நிதிச் சந்தை' எனப்படுகிறது.

(ii) நிதி அளிப்பவர்களிடம் உள்ள உபரி நிதியை நிதி தேவை உள்ளவரின் நிதிப் பற்றாக்குறையை நோக்கி கடன் நிதியை எடுத்து செல்வது நிதிச் சந்தை எனவும் கூறலாம்.

**2. இரண்டாம் நிலைச் சந்தை - சிறு குறிப்பு வரைக.** *[QY-2019; PTA-2]*

(i) இரண்டாம் நிலைச் சந்தை ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

(ii) இரண்டாம் நிலைச் சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

**3. இந்தியாவில் நிதிச் சந்தையின் வரை எல்லையை விளக்குக.**

(i) நிதிச் சந்தை தனிநபர்களுக்கு, விவசாயத் துறைகளுக்கு, தொழிற்துறைகளுக்கு, சேவை துறைகள், நிதி நிறுவனங்களான வங்கிகள், காப்பீட்டு துறைகள், சேம நல காப்பு நிதிகள் மற்றும் அரசுக்கு நிதி உதவிகளை வழங்குகிறது.

(ii) மேற்குறிப்பிட்ட அமைப்புகள் தேவையான நிதியை நிதிச் சந்தையின் உதவியுடன் குறித்த நேரத்தில் பெறுகின்றனர்.

(iii) நிதிச் சந்தையின் மூலம் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதி உதவியினை நிறுவனங்கள் பெறுகின்றன. இது ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 5 அத்தியாயம்

# மூலதனச் சந்தை

## பொருளடக்கம்


5.1. பொருள் மற்றும் வரைவிலக்கணம்
5.2. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகள்
5.3. மூலதனச் சந்தையின் வகைகள்
5.4. மூலதனச் சந்தையின் பணிகள் மற்றும் முக்கியத்துவம்
5.5. இந்திய மூலதன சந்தை – தோற்றம் மற்றும் வளர்ச்சி
5.6. புதிய நிதி நிறுவனங்கள்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. மூலதன சந்தை _______ ஐ வழங்குவதில்லை.** *[PTA-1]*

அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள்

இ) சமநிலை நிதி ஈ) நீண்ட கால நிதி

**[விடை: அ) குறுகிய கால நிதி]**

**2. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு** *[QY-2019; PTA-2; Mar-2020]*

அ) 1990 ஆ) 1992

இ) 1998 ஈ) 1997

**[விடை: ஆ) 1992]**

**3. முதல் நிலைச் சந்தை என்பது பத்திரங்களை / பிணையங்களை _______ முறை வியாபாரம் செய்யும் ஒரு சந்தை ஆகும்.** *[PTA-2]*

அ) முதன்முறை ஆ) இரண்டாம் முறை

இ) மூன்றாம் முறை ஈ) பலமுறை

**[விடை: அ) முதன்முறை]**

**4. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் _______ ஆவர்.** *[PTA-3]*

அ) தனிநபர் ஆ) நிறுமங்கள்

இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

**[விடை: ஈ) மேலே உள்ள அனைத்தும்]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**5. பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே ....... ஆகும்.**

அ) இந்திய உடனடி பங்கு மாற்றகம்

ஆ) ஏட்டுக்கடன்

இ) பரஸ்பர நிதி

ஈ) துணிகர முதல்

**[விடை: அ) இந்திய உடனடி பங்கு மாற்றகம்]**

## II. குறு வினாக்கள்

**1. மூலதனச் சந்தை என்றால் என்ன? (ஏதேனும் 3)** *[PTA-2]*

(i) மூலதனச் சந்தை என்பது நிதி பத்திரங்களான பிணையங்கள் மற்றும் பங்குகளின் வர்த்தகத்தில் ஈடுபடும் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் கூடும் சந்தை ஆகும்.

(ii) தனிநபர் மற்றும் நிறுவனங்கள் போன்ற பங்கேற்பாளர்களால் வாங்குதல் மற்றும் விற்றல் மேற்கொள்ளப்படுகிறது.

**2. OTCEI - சிறு குறிப்பு வரைக.** *[QY-2019]*

பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும். இதன் மூலம் முதலீட்டாளர் மற்றும் நிறுமத்திற்கு சில பிரச்சனைகள் இருந்த போதும் வெளிப்படைத் தன்மை, விரைவான முடிவு, நெகிழ்வு தன்மை ஆகிய நன்மைகளையும் அளிக்கிறது.

**3. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?**

மூலதனச் சந்தையின் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதி நிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது.

**4. மூலதனச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது?**

பத்திரங்களின் விலை மூலதனச் சந்தையில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

## III. சிறு வினாக்கள்

**1. மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் என்ன? விளக்குக. (ஏதேனும் 3)** *[QY-2019]*

**மூலதனச் சந்தையின் வகைகள் :** மூலதனச் சந்தை பின்வரும் வரைபடத்தின்படி முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முதல் நிலைச் சந்தை, இரண்டாம் நிலைச் சந்தை.

**முதல் நிலைச் சந்தை Primary Market:**

(i) முதல்நிலைச் சந்தை என்பது புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும். ஆகையால் இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.

(ii) முதல் நிலைச் சந்தை பொதுமக்களுக்கு முதன்முதலில் வெளியிடும் பத்திரங்களை கையாளுகிறது.

(iii) முதல் நிலை சந்தையில் கடனாளிகள் நீண்டகால நிதிக்காக புதிய நிதி பத்திரங்களை மாற்றம் செய்து கொள்கின்றனர்.

**இரண்டாம் நிலைச் சந்தை Secondary Market :**

(i) ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை என வரையறுக்கப்படுகிறது.

(ii) ஏற்கனவே முதல் நிலைச் சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள் இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.

(iii) இது பங்கு மாற்றகம் உடனடி மாற்றகம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

**2. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.**

(i) **சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் :** மூலதனச் சந்தையில் பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து (தனிநபர், நிறுமங்கள், அரசு முதலியன) சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது, பத்திரங்கள் முதலீடு செய்யும் மக்களுக்கு நிச்சயமான ஊக்கத் தொகையாக பங்கு மாற்றகத்தின் இரட்டை சிறப்பியல்புகளான நியாயமான வருவாய் மற்றும் நீர்மைத் தன்மை கிடைக்கிறது. இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை முடுக்குகிறது.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



(ii) **உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:** பங்கு மாற்றகம் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் பத்திரங்களை வாங்க மற்றும் விற்பதற்கு ஒரு வசதியான மையத்தை வழங்குகிறது. எளிய சந்தையிடுதல் பத்திரங்களில் முதலீடு செய்வதில் மற்ற சொத்துக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிக நீர்மைத் தன்மையை உருவாக்குகிறது.

**3. ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களை பற்றி விளக்குக.** *[PTA-3]*

**ஏட்டுக்கடன் தரகு முகமை நிறுவனங்கள் :**

(i) விற்பனை மூலம் பெற வேண்டிய பெறுதல்களின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.

(ii) இந்தியாவில் செயல்படும் சில நிறுவனங்களான, SBI மற்றும் வணிக சேவைகள் SBIன் துணை நிறுவனம் மற்றும் கான்பேங்க் ஃபேக்டரிக் லிமிடெட், கனரா வங்கியின் துணை நிறுவனம் ஆகும்.

**துணிகர நிதி நிறுவனம் :**

(i) துணிகர மூலதன நிதி என்பது சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும். இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

(ii) துணிகர மூலதனம் என்பது தொழில்நுட்ப திட்டங்களை வணிகமயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது.

## IV. பெரு வினாக்கள்

**1. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க.** *[PTA-3; Mar-2020]*

மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகள் பின்வருமாறு.

(i) **பத்திரங்களின் சந்தை :** பங்குகள், கடனுறுதிப் பத்திரங்கள் போன்ற பத்திரங்கள் மூலதனச் சந்தையில் கையாளப்படுவதல் இது பத்திரங்களின் சந்தை என அழைக்கப்படுகிறது.

(ii) **விலை :** பத்திரங்களின் விலை மூலதனச் சந்தயில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

(iii) **பங்கேற்பாளர்கள்:** மூலதனச் சந்தையின் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதி நிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது.

(iv) **இட அமைவு:** மூலதனச்சந்தைக்கான இடம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதில்லை என்றாலும் பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் வேண்டும்.

(v) **நிதி சார்ந்த சொத்துக்களின் சந்தை:** மூலதனச் சந்தை நீண்டகால நிதி சார்ந்த சொதத்துக்களுக்கான ஒரு மேடையை வழங்குகிறது.

**2. மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)**

மூலதனச் சந்தையின் முக்கியத்துவம் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:-

(i) **சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் :** மூலதனச் சந்தையில் பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து (தனிநபர், நிறுமங்கள், அரசு முதலியன) சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது. இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை முடுக்குகிறது.

(ii) **நிலை மூலதனம் :** மூலதனச் சந்தை/ பங்கு மாற்றகம் நிறுமங்கள் நிலை மூல தனத்தை திரட்டுவதற்கு உதவிபுரிகிறது. முதலீட்டாளர்கள் நிலையான காலத்திற்கு தங்களுடைய நிதிகளை ஒப்புவிக்க முடியாது. ஆனால் நிறுமங்களுக்கு நிலையாக நிதி தேவைப்படுகிறது.

(iii) **தொழிற்துறை வளர்ச்சி :** பொருளாதாரத்தின் தொழிற்துறைக்கு மூலவளங்களை மாற்றுவதன் மூலம் பங்குமாற்றகம் ஒரு மைய சந்தையாக உள்ளது. இது போன்ற நிறுவனங்கள் உற்பத்தி வழிகளில் முதலீடு செய்ய மக்களை ஊக்குவிக்கின்றது.

(iv) **உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:** பங்கு மாற்றகம் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் பத்திரங்களை வாங்க மற்றும் விற்பதற்கு ஒரு வசதியான மையத்தை வழங்குகிறது. எளிய சந்தையிடுதல் பத்திரங்களில் முதலீடு செய்வதில் மற்ற சொத்துக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிக நீர்மைத் தன்மையை உருவாக்குகிறது.

(v) **செயல் திறனுக்கு நம்பகமான மான வழிகாட்டி :** மூலதனச் சந்தை நிறுமங்களின் செயல்திறன் மற்றும் நிதி நிலைக்கு ஒரு நம்பகமான வழிகாட்டியாக சேவைபுரிகிறது.

(vi) **நிதிகளின் உரிய திசையில் ஆற்றுப்படுத்தல்:** பத்திரங்களின் நடப்பு சந்தை விலை மற்றும் அதன் வருவாய்,


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 6 பணச் சந்தை

அத்தியாயம்

## பொருளடக்கம்


6.1. பொருள் மற்றும் வரைவிலக்கணம்

6.2. நோக்கம் மற்றும் சிறப்பியல்புகள்

6.3. பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தைக்கிடையே உள்ள வேறுபாடுகள்

6.4. பணச் சந்தையின் பங்கேற்பாளர்கள்

6.5. பணச் சந்தை ஆவணங்கள்

6.5.1 கருவூல இரசீதுகள்

6.5.2 வைப்புச் சான்றிதழ்

6.5.3 வணிக இரசீதுகள்

6.5.4 அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தை


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. அழைப்பு பணச் சந்தையில் முதலீடு செய்யும் பணத்திற்கு ________ உடன் அதிக நீர்மத் தன்மையை வழங்குகிறது.** *[PTA-5]*

அ) குறைந்த இலாபத் தன்மை ஆ) உயர் இலாபத்தன்மை

இ) வரையறுக்கப்பட்ட இலாபத்தன்மை ஈ) நடுத்தர இலாபத் தன்மை

**[விடை: அ) குறைந்த இலாபத்தன்மை]**

**2. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ________** *[HY-2019; PTA-6]*

அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

**[விடை: அ) வணிக வங்கி]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. குறுகிய கால நிதி ஆதாரங்களை ஏற்படுத்துவதற்காக பணச்சந்தையில் நிறும அமைப்புகள் வெளியிடும் கடன் ஆவணங்கள் _______ என்று அழைக்கப்படுகிறது.**

அ) கருவூல இரசீதுகள்
ஆ) வணிகத் தாள்
இ) வைப்புச் சான்றிதழ்
ஈ) அரசுப் பத்திரங்கள்

**[விடை: ஆ) வணிகத் தாள்]**

**4. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை _______ என்று அழைக்கலாம்.** *[PTA-4]*

அ) வணிகத்தாள் சந்தை
ஆ) கருவூல இரசீது சந்தை
இ) வணிக இரசீது சந்தை
ஈ) மூலதனச் சந்தை

**[விடை: இ) வணிக இரசீது சந்தை]**

**5. சந்தைப்படுத்தக் கூடிய உரிமையியலான ஆவணம், காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை _______ என்று குறிப்பிடுகிறோம்.**

அ) கருவூல இரசீது
ஆ) வைப்புச் சான்றிதழ்
இ) வணிக இரசீது
ஈ) அரசுப் பத்திரங்கள்

**[விடை: ஆ) வைப்புச் சான்றிதழ்]**

## II. குறு வினாக்கள்

**1. வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன?**

வைப்பு சான்றிதழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய கால வைப்பு ஆவணங்களாகும்.

**2. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?** *[QY-2019; Mar-2020]*

அரசு அல்லது தங்கமுனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

**3. ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?**

வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே 'ஏலம் விடுதல்' என அழைக்கப்படுகின்றது.

**4. மாற்றம் என்பதன் பொருள் யாது?**

ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டாம் நிலை சந்தையில் இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு 'மாறுதல்' என்று அழைக்கப்படுகிறது.

## III. சிறு வினாக்கள்

**1. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை? (ஏதேனும் 3)** *[Govt. MQP-2019; PTA-4, Aug-2021]*

கருவூல இரசீது பின்வரும் பொதுவான இயல்புகளை உடையது. அவை பின்வருமாறு.

(i) வெளியிடுபவர்
(ii) நிதி இரசீது
(iii) நீர்மைத் தன்மை
(iv) முக்கிய ஆதாரம்
(v) பண மேலாண்மை

**2. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்? (ஏதேனும் 3)**

(i) பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள்
(ii) பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்
(iii) தனியார் மற்றும் பொத்துறை வங்கிகள்
(iv) பரஸ்பர நிதி நிறுவனங்கள்
(v) காப்பீட்டு நிறுவனங்கள்
(vi) வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்
(vii) இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி
(viii) வணிக வங்கிகள்
(ix) மாநில அரசுகள்
(x) பொதுமக்கள்

**3. கருவூல இரசீதின் வகைகளை விவரி. (ஏதேனும் 3)** *[Govt. MQP-2019; Aug-2021]*

**கருவூல இரசீதின் வகைகள் :**

காலவரையறை அடிப்படையில் இந்த இரசீதுகள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு.

(i) 91 நாட்கள் கருவூல இரசீதுகள்
(ii) 182 நாட்கள் கருவூல இரசீதுகள்
(iii) 364 நாட்கள் கருவூல இரசீதுகள்


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


(i) 91 நாட்கள் கருவூல ரசீதுகள் ஒரு நிலையான 4 சதவீத தள்ளுபடி விகிதத்தில் ஏலத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன.

(ii) இந்திய ரிசர்வ் வங்கி 91 நாட்கள் மற்றும் 182 நாட்கள் கருவூல இரசீதுகளை ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.

(iii) 364 நாட்கள் கருவூல இரசீதுகள் எவ்வித நிலையான விகிதமும் கொண்டு செயல்படுவதில்லை. இந்த தள்ளுபடி விகிதம் அதிகார அமைப்பின் இசைவினை பெற்று பங்கேற்பாளர்களுக்கு ஏலத்தில் தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய விகிதத்தையே தள்ளுபடி விகிதம் என்று குறிப்பிடப்படுகிறது.

**4. வணிக இரசீதின் வகைகளை விவரி. (ஏதேனும் 3)** *[QY-2019]*

(i) **தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள் DEMAND AND USANCE BILLS :**
தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.

(ii) **தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள் CLEAN BILLS AND DOCUMENTARY BILLS :** பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.

(iii) **தனித்துவமான இரசீதுகள் :** தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.



## IV. பெரு வினாக்கள்

**1. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)** *[PTA-1]*

**பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை வேறுபாடுகள் :**

| வ. எண் | நன்மைகள் | பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|---|---|
| (i) | நிதியின் காலம் | இச்சந்தை ஒரு வருட காலத்திற்கும் மிகாமல் நடக்கும் குறுகிய கால நிதிகளுக்கான சந்தையாகும். | இச்சந்தை ஒரு வருட காலத்திற்கும் மேலான நீண்ட கால நிதிகளுக்கான சந்தையாகும். |
| (ii) | வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள் போன்ற ஆவணங்களுடன் தொடர்புடையது (மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச்சீட்டு, வணிகத் தாள் போன்றவை) | பங்குகள்கள்,கடனீட்டுப்பத்திரங்கள், அரசு பத்திரங்கள் போன்ற ஆவணங்களுடன் தொடர்புடையது. |
| (iii) | ஆவணங்கள் கிடைக்கும் இடம் | பணச் சந்தை ஆவணங்கள் பொதுவாக இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறாது. | மூலதனச் சந்தை ஆவணங்கள் பொதுவாக இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறும். |
| (iv) | உட்பிரிவு | பணச் சந்தையில் அத்தகைய உட்பிரிவு ஏதுமில்லை | மூலதனச் சந்தையில் முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரண்டு உட்பிரிவுகள் உள்ளது. |
| (v) | பரிவர்த்தனை நடைபெறும் இடம் | பரிவர்த்தனைகள் பெரும்பாலும் தொலைபேசி வழியாகவே நடைபெறு கின்றன. இதற்கு முறையான இடம் ஏதுமில்லை. | பரிவர்த்தனைகள் ஒரு முறையான இடத்தில் இடம் பெறுகின்றன. உதாரணம்: பங்கு பரிமாற்றகம். |


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 3 நிதிச் சந்தை – II

# அத்தியாயம் 7 பங்கு மாற்றகம்

## பொருளடக்கம்


7.1. பங்கு மாற்றகம் – தோற்றம், பொருள், வரைவிலக்கணம்
7.2. பங்கு மாற்றகத்தின் பணிகள்
7.3. பங்கு மாற்றகத்தின் இயல்புகள்
7.4. இந்தியாவில் பங்குச்சந்தையின் பயன்கள் மற்றும் குறைபாடுகள்
7.5. இந்தியாவில் பங்குச்சந்தை
7.6. ஊக வணிகர்களின் வகைகள்
7.7. பங்கு பரிவர்த்தனை மற்றும் பண்டங்கள் பரிமாற்றத்திற்கான வேறுபாடு
7.8. பங்கு சந்தையில் தற்போதைய வளர்ச்சி


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு :

**1. ________ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.** *[PTA-1]*

அ) இலண்டன் பங்குச் சந்தை
ஆ) பம்பாய் பங்குச் சந்தை
இ) தேசிய பங்குச் சந்தை
ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

**[விடை: ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை]**

**2. நாட்டில் ________ பங்குச் சந்தைகள் உள்ளன.** *[QY-2019]*

அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

**[விடை: ஆ) 24]**

**3. தன் வணிகர் பங்குச்சந்தையில் ஈடுபடுவது** *[QY-2019; PTA-2; Aug-2021]*

அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக
ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக
ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

**[விடை: ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக]**

**4. நம்பிக்கையற்ற ஊகவணிகர்கள் என்பவர்**

அ) மான் ஆ) கரடி
இ) காளை ஈ) வாத்து

**[விடை: ஆ) கரடி]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**5. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்** *[PTA-4, 5]*

அ) காளை ஆ) கரடி
இ) மான் ஈ) வாத்து

**[விடை: அ) காளை]**

## II. குறு வினாக்கள்

**1. பங்குச் சந்தை என்றால் என்ன?** *[PTA-1]*

பங்குச் சந்தை என்பது பெரு நிறுவன மற்றும் பிற பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும். இங்கே, பத்திரங்கள் சில நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் படி வாங்கப்பட்டு விற்கப்படுகின்றன.

**2. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.**

இந்தியாவிலுள்ள பல்வேறு பங்குச் சந்தைகளின் பெயர்கள் பின்வறுமாறு.

(i) தி பாம்பே பங்குச்சந்தை.
(ii) அகமதாபாத் பங்குச் சந்தை சங்கம் லிமிடெட்.
(iii) பெங்களூரு பங்கு சந்தை லிமிடெட்.
(iv) புவனேஷ்வர் பங்குச் சந்தை.
(v) கல்கத்தா பங்கு பரிவர்த்தனை சங்கம் லிமிடெட்.

**3. துணைத் தரகர் என்றால் என்ன?**

துணைத் தரகர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்படுவார். தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தைப் பெற்று தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

**4. தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?** *[PTA-2, Aug-2021]*

(i) தரகர்கள், கழிவு முகவர் ஆவர்.
(ii) பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்குமிடையே இடை நிலையாளர்களாகத் தரகர்கள் செயல்படுகின்றனர்.
(iii) இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை.

**5. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?** *[PTA-3]*

(i) இந்தியாவில் பங்கு மாற்றகங்களில் நான்கு வகையான ஊக வணிகர்கள் செயல்படுகின்றனர்.
(ii) அவர்கள் காளை, கரடி, கலைமான், முட வாத்து என்று அழைக்கப்படுகின்றனர்.

## III. சிறு வினாக்கள்

**1. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி? (ஏதேனும் 3)** *[HY-2019]*

பங்கு மாற்றகங்களின் குறைபாடுகளை பின்வருமாறு கூறலாம்.

(i) பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
(ii) பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
(iii) ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப் படுத்துவதில் தோல்வி.
(iv) ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது.
(v) பங்கு பரிவர்த்தனையின் விளிம்பு தேவைகள் அல்லது உற்பத்திச் சந்தைகளின் விஷயத்தில் வலியுறுத்துவதில்லை.
(vi) பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்குமுறைகள் இல்லை.

**2. காளை மற்றும் கரடி - விளக்குக.** *[PTA-1; Govt. MQP-2019; QY-2019; Aug-2021]*

**காளை (Bull)**

(i) பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா (Tejiwala) என்றழைக்கப்படுகிறார்.
(ii) ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்த வகை ஊகவணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார்.
(iii) இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் (Optimism) என்ற மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி (Bear)** *[Mar-2020]*

(i) கரடி அல்லது மண்டிவாலா (Mandiwala) என்றழைக்கப்படும் ஊக வணிகர், எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர்.
(ii) ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.அதேபோல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.
(iii) ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு (Pessimism) கொண்டவர்.

**3. மான் மற்றும் முடவாத்து - விளக்குக.**

**கலைமான் (Stag) :** *[HY-2019; PTA-2]*

(i) கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் (at premium) விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு கோரி விண்ணப்பம் செய்வார்.

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 14 அத்தியாயம்

# சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை

## பொருளடக்கம்


14.1. சந்தையிடுகை அறிமுகம்
14.2. சந்தையிடுகையில் பரிணாம வளர்ச்சி
14.3. சந்தையியல் கருத்து
14.4. சந்தையிடுகையின் நோக்கங்கள்
14.5. சந்தையிடுகையின் முக்கியத்துவம்
14.6. சமுதாயத்தில் தனிநிறுவனத்திற்கு சந்தையியலின் முக்கியத்துவம்
14.7. சந்தையிடுகையின் பணிகள்
14.8. சந்தையிடுகை கலவையின் பொருள் மற்றும் வரையிலக்கணம்.
14.9. சந்தையிடுகை கலவையின் கூறுகள்
14.10. மரபு வழி மற்றும் நவீன சந்தையிடுகை கலவை நவீன வழி முறை


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை _________** *[QY-2019; PTA-6; Aug-2021]*

அ) முற்றுரிமை முறை
ஆ) பணத்திற்கு மாற்றுதல்
இ) பண்டமாற்று முறை
ஈ) தற்சார்பு உற்பத்தி

**[விடை: இ) பண்டமாற்று முறை]**

**2. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?**

அ) வாடிக்கையாளர்
ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர்
ஈ) சில்லறை விற்பனையாளர்

**[விடை: அ) வாடிக்கையாளர்]**

**3. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?**
*[Govt. MQP-2019; QY-2019; Mar-2020; Sep-2020]*

அ) இடக்கூறு
ஆ) பொருள்கூறு
இ) திட்டக்கூறு
ஈ) விலை கூறு

**[விடை: இ) திட்டக்கூறு]**

**4. சந்தையிடுகை கலவை என்பது சந்தையிடுகை திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள் _________ தேவை மற்றும் மன நிறைவு மூலம் லாபம் பெறுகிறது.**

அ) மொத்தவிற்பனையாளர்
ஆ) சில்லறை விற்பனையாளர்
இ) நுகர்வோர்
ஈ) விற்பனையாளர்

**[விடை: இ) நுகர்வோர்]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


5. **கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?** *[PTA-2]*

அ) கல்வி ஆ) கைபேசி
இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

[விடை: அ) கல்வி]

## II. குறு வினாக்கள்

1. **சந்தையிடுதல் என்றால் என்ன?**

சந்தையிடுகை ஒரு தொழில் சார்ந்த பணியாகும். மனித தேவை மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் அனைத்து நடவடிக்கைகளை உள்ளடக்கும் ஓர் செயலாகும். பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தியாளரிடமிருந்து இறுதி பயன்பாட்டு நுகர்வோர் வரை கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு வசதியை ஏற்படுத்தும் ஓர் நடவடிக்கை சந்தையிடுகையாகும்.

2. **சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.** *[PTA-2]*

திரு. ஜெரோமி எம்சி கார்தோ அவர்களின் கூற்றுப்படி, "சந்தையிடுகை கலவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது. அவையாவன, பொருள் கூறுகள், விலை கூறுகள், விற்பனை மேம்பாடு கூறுகள் மற்றும் இட கூறுகள் ஆகும்." என்கிறார்.

3. **தரப்படுத்துதல் என்றால் என்ன?**

தரப்படுத்துதல் என்பது பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பது ஆகும். பொருட்கள் தரப்படுத்துவதில் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. அதாவது பொருளின் அளவு, வண்ணம், சுவை மற்றும் அதன் தோற்றம் போன்றவையாகும்.

## III. சிறு வினாக்கள்

1. **சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?**

(i) நவீன சந்தையிடுகை கொள்கையானது அறிவு திறத்தை பயன்படுத்த உதவுகிறது.
(ii) சந்தையிடுகை துறையில் மேம்பாட்டை ஏற்படுத்துகிறது.
(iii) கொள்கை வழிகாட்டல் மேம்பாடு மற்றும் நல்லதொரு பயனுள்ள முடிவினை செயல்படுத்துகிறது.
(iv) சந்தையிடுகை தொடர்புள்ள பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண வழிவகை செய்கிறது.
(v) சந்தையிடுகை தொடர்பான பிரச்சினை குறித்து மேலும் தகவல்களை கண்டு உணருகிறது.
(vi) முன்னேற்ற செயல் குறித்து சரியான நடவடிக்கை மேற்கொள்கிறது.

2. **சந்தையிடுகையின் கருத்துக்களை விவரிக்கவும்.**

**சந்தையிடுகையின் கருத்துக்கள்:**

(i) நவீன சந்தையிடுகை கொள்கையானது அறிவு திறத்தை பயன்படுத்த உதவுகிறது.
(ii) கொள்கை வழிகாட்டல் மேம்பாடு மற்றும் நல்லதொரு பயனுள்ள முடிவினை செயல்படுத்துகிறது.
(iii) முன்னேற்ற செயல் குறித்து சரியான நடவடிக்கை மேற்கொள்கிறது.

3. **சந்தையிடுகை கலவை என்பது பற்றி நீவீர் அறிவது யாது? ஏதேனும் இரண்டு கூறுக.** *[PTA-6]*

(i) சந்தையிடுகை கலவை மூலம் நிறுவனம் தனது நுகர்வோர்களை குறிவைத்து அதன் மூலம் லாபம் ஈட்டுவதே ஆகும். இத்தகைய சந்தையிடுகையின் செயல்பாடுகள் நான்கு வகை கலவை பொருட்களை கொண்டுள்ளது. அதாவது பொருட்கலவை, விலை கலவை, இடக் கலவை, மற்றும் மேம்பாட்டு கலவை போன்றவையாகும்.

(ii) **பொருள் (Product) :** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும். பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

(iii) **விலை (Place) :** பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி "விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு ஆக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் விலை" என்கிறார்.

## IV. பெரு வினாக்கள்

1. **சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. (ஏதேனும் 5)** *[QY-2019; PTA-1; Aug-2021]*

சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சியின் நிலைகள் :

(i) **பண்டமாற்று முறை:** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொண்டார்கள், வேறு எந்த வித மாற்றுக்களும், இதில் மேற்கொள்ளப்படவில்லை குறிப்பாக, பணம்.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

(ii) **உற்பத்தி சார்ந்து:** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு சிறிய அளவிலான முக்கியத்துவமே இக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது.

(iii) **விற்பனை சார்ந்து :** இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது. விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

(iv) **சந்தையிடுகை சார்ந்து :** வாடிக்கை யாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்று தீர்ப்பதில் மட்டுமே, அதிக போட்டி இருந்து வந்துள்ளது. மேலும், தனியாள் விற்பனை மற்றும் அதிக அளவினை விற்பனை மேம்பாடு, போன்றவற்றை விற்பனை ஊக்கிகளாக பயன்படுத்தப்படுகிறது.

(v) **நுகர்வோர் சார்ந்து:** இந்த நிலையில் மட்டுமே மேம்படுத்தப்பட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் அவைகள் நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் வகையில் சுவை, விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

(vi) **மேலாண்மை சார்ந்த :** சந்தையிடுகை ஒரு மேலாண்மை பணியினை மேற்கொள்கிறது அதாவது இன்றைய நுகர்வோரின் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடல், பொருள் மேம்பாடு செய்தல் மற்றும் வினியோகம் செய்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**2. சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.** *[Govt. MQP-2019; PTA-2; Sep-2020]*

(i) **பொருள் (Product) :** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும். பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது. என்று கூறுகின்ற அளவிற்கு பொருள் முக்கிய இடம் பெறுகிறது.

(ii) **விலை (Price) :** பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி "விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு ஆக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் விலை என்கிறார்.

(iii) **இடம் (Place) :** ஒரு பொருள் என்னதான் தரம் வாய்ந்தவையாகவும், விலையில் சாதகத்தன்மை மற்றும் சிறந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இருந்தபோதிலும், உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லை எனில் அனைத்தும் பயன் அற்றதாகும். எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

(iv) **விற்பனை மேம்பாடு/விளம்பரம் (Promotion):** சந்தையில் ஒரு பொருள் என்ன தான் தரமுடையதாக இருந்தாலும் மேலும் விலையில் சாதக நிலை இருந்தாலும் நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பு இயல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில் அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒரு போதும் அடைய இயலாது, எனவே மேம்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் அவசியமான ஒன்றாகும். மேம்பாட்டு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

## PTA வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்புடையது எது?** *[PTA-2]*

அ) இடம்
ஆ) உற்பத்தி
இ) நுகர்வு
ஈ) வியாபாரம்

[விடை: அ) இடம் ]

### 2 மதிப்பெண்கள்

**1. பண்டங்கள் மற்றும் பணிகளின் விலையை பாதிக்கும் அக காரணிகள் இரண்டினை தருக.** *[PTA-6]*

(i) விலை
(ii) சந்தையின் நோக்கங்கள்




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 6 நுகர்வோர் பாதுகாப்பு

# 16 அத்தியாயம் நுகர்வோரியல்

## பொருளடக்கம்


16.1. நுகர்வோர்

16.2. நுகர்வோர் சுரண்டப்படல்

16.3. நுகர்வோரியல் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

16.4. நுகர்வோரியலின் முக்கியத்துவம்.

16.5. நுகர்வோரியலின் தோற்றம், பரிணாமம் மற்றும் வளர்ச்சி

16.6. நுகர்வோர் பாதுகாப்பு

16.7. நுகர்வோர் பாதுகாப்பின் தேவை

16.8. நுகர்வோர் சட்டங்கள்

16.9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986

16.10. வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு வாங்குவோர்விழித்திரு கோட்பாடு

16.11. விற்பனையாளர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு தத்துவம்




orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores




# பயிற்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு** *[PTA-4]*

அ) 1960 ஆ) 1957
இ) 1954 ஈ) 1958

**[விடை: அ) 1960]**

**2. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?** *[Govt. MQP-2019; PTA-5; Sep-2020, Aug-2021]*

அ) மகாத்மா காந்தி
ஆ) ஜான் எப். கென்னடி
இ) ரால்ப் நேடர்
ஈ) ஜவஹர்லால் நேரு

**[விடை: இ) ரால்ப் நேடர்]**

**3. பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு**

அ) 1962 ஆ) 1972
இ) 1930 ஈ) 1985

**[விடை: இ) 1930]**

**4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்** *[PTA-1]*

அ) 01.01.1986 ஆ) 01.04.1986
இ) 15.04.1987 ஈ) 15.04.1990

**[விடை: இ) 15.04.1987]**

**5. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ---------- நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.** *[PTA-2]*

அ) ஆகஸ்டு 15 ஆ) ஏப்ரல் 15
இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15

**[விடை: இ) மார்ச் 15]**

## II. குறு வினாக்கள்

**1. நுகர்வோர் என்பவர் யார்?** *[HY-2019; PTA-1]*

உற்பத்தியாளரிடமிருந்து அல்லது விற்பனையாளரிடமிருந்து பொருட்களை வாங்குவோர் அல்லது இயற்கை வளங்களை கொண்டு உருவாக்கப்பட்டு (காற்று, நீர் மற்றும் இயற்கை வளங்கள்) அல்லது பிறரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படும் பொருட்களை பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவார்.

**2. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.** *[Govt. MQP-2019; Sep-2020; Aug-2021]*

(i) உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன.
(ii) தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது.

**3. "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன?** *[PTA-2]*

(i) வாங்குவோர் ஜாக்கிரதை எனும் சொல் கேவியட் எம்ப்டர் எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது ஆகும். "உள்ளது உள்ளபடியே" என்ற சொற்றொடரைப்போன்று நுகர்வோர் வாங்கிய பொருட்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை அல்லது குறைபாடுடையவை எனில் அத்தகு இடர்பாடுகளுக்கு வாங்குபவரே பொறுப்பேற்க வேண்டும்.
(ii) பொருட்களை வாங்கியவர் அதற்கு நிவாரணம் தேட இயலாது என நுகர்வோரை எச்சரிக்கை செய்யும் தத்துவமே "வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாடாகும்.

**4. "விற்பனையாளர் ஜாக்கிரதை" என்றால் என்ன?**

(i) "விற்பனையாளர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" (Let the Buyer Beware) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
(ii) விற்பனையாளர்கள் தங்களது பொறுப்பிலிருந்து தப்பிக்க இயலாது. விளம்பரங்களில் "பொருட்கள் உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டாலொழிய, பொருட்களை வாங்குபவருக்கு, அப்பொருளை வாங்குவதற்கான நோக்கத்தை அப்பொருள் நிறைவேற்றும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே விற்பனையாளர் அப்பொருளை விற்பனை செய்ய வேண்டும்.

**5. சிறு குறிப்பு வரைக. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986.**

(i) பல்வேறு நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் நுகர்வோரின் தொடர் அழுத்தத்தின் காரணமாக மைய அரசு "நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986" எனும் விரிவான சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 15.04.1987 அன்று அமுலுக்கு வந்தது. இச்சட்டம் 1993ல் திருத்தியமைக்கப்பட்டது. இச்சட்டம் சுருக்கமாக "கோப்ரா" (COPRA) என்றழைக்கப்படுகிறது.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 7 வாணிபச் சூழல்

# 19 அத்தியாயம் சுற்றுச்சூழல் காரணிகள்

## பொருளடக்கம்


19.1. வணிகச் சூழலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
19.2. வணிகச்சூழலின் வகைகள்
19.2.1. உள்ளார்ந்த அல்லது உட்புறச்சூழல்
19.2.2. வெளிப்புறச் சூழல்
19.2.3. நுண்ணியச் சூழல்
19.2.4. பரந்தச் சூழல்
19.3. வணிகத்தின் எதிர்காலச் சூழல்
19.4. பெருநிறுவன ஆளுகை
19.5 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1.** VUCA ______, ______, ______, ______.

அ) மதிப்பு நிச்சயமின்மை சிக்கலானது தெளிவில்லாதது
ஆ) மதிப்பு தவிர்க்க இயலாதது நிறும மற்றும் அதிகாரம்
இ) மாற்றம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது நிறுமம் ஏலம்
ஈ) மேற்கூறிய அனைத்தும் **[விடை: அ) மதிப்பு நிச்சயமின்மை சிக்கலானது தெளிவில்லாதது]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


2. **ஜி.எஸ்.டி. என்பது ______, ______,______.**
அ) சரக்கு மற்றும் சமூக வரி
ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி
ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி
**[விடை: ஆ) சரக்கு மற்றும் சேவை வரி]**

3. **ஒரு நிறுவனத்திற்குள் உள்ள காரணிகள் ______ சூழல் ஆகும்.**
அ) அக சிந்தனையாளர்
ஆ) புற நோக்கியான்
இ) சக மனிதர்கள்
ஈ) மேற்கூறிய அனைத்தும்
**[விடை: அ) அக சிந்தனையாளர்]**

4. **வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ______ காரணியாகும்.**
அ) கட்டுப்படுத்த முடியாது
ஆ) கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது
இ) சமாளிக்க கூடியது
ஈ) சமாளிக்க முடியாதது
**[விடை: அ) கட்டுப்படுத்த முடியாது]**

5. **இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள் ---------- மற்றும் ______ ஆகும்.**
அ) நேர்மறை மற்றும் எதிர்மறை
ஆ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்
இ) நல்லது மற்றும் கெட்டது
ஈ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாதது
**[விடை: ஆ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்]**

## II. குறு வினாக்கள்

1. **உட்புறச் சூழல் என்றால் என்ன?** *[Mar-2020]*
உட்புறச் சூழல் என்பது நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும். எனவே இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக கொள்கைகள் மற்றும் திட்டங்கள், நிறுவன கட்டமைப்பு, ஊழியர்கள், நிதி மற்றும் வளங்கள் போன்றவை ஆகும்.

2. **பெருநிறுவன நிர்வாகத்தின் பொருள் என்ன?** *[HY-2019]*
(i) பெறுநிறுவன ஆளுகை என்பது ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் கொள்கைகள் ஆகும். ஒரு நிறுவனத்தை நிர்வகித்து அதன் குறிக்கோளை அடைவதற்கான ஒரு வடிவமைப்பை இது வழங்குகிறது.
(ii) பெருநிறுவன ஆளுகை என்பது பயமின்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்பு மற்றும் பொறுப்பு ஏற்பு (Accountability) போன்ற நான்கு தூண்களை அடிப்படையாக கொண்டது.

3. **சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) என்றால் என்ன?** *[PTA-2]*
(i) நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகளில் மறைமுக வரியாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு விரிவான, பல கட்ட இலக்கு அடிப்படையிலான மதிப்பு கூட்டுவரியாகும்.
(ii) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்பது, சரக்குகள் மற்றும் சேவை வரி தொடர்பான பிரச்சினைகள் தீர்ப்பது தொடர்பாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பரிந்துரைகளை வழங்கும் ஒரு அரசியலமைப்பு ஆகும்.

4. **VUCA-ஐ விரிவாக்கம் தருக.**
விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்றத்தன்மை, சிக்கலானத் தன்மை மற்றும் தெளிவற்றத் தன்மை கொண்டவை என்று கூறலாம்.

## III. சிறு வினாக்கள்

1. **அரசியல் சூழ்நிலை காரணிகள் யாவை? (ஏதேனும் 3)** *[Govt. MQP-2019; PTA-1]*
சட்டம் மற்றும் அரசியல் சுற்றுச் சூழலின் முக்கிய கூறுகள் பின்வருமாறு :
(i) அரசியல் ஸ்திரத்தன்மை என்பது, தேர்தல் அமைப்பு, சட்டம் மற்றும் ஒழுங்குநிலை, இராணுவம் மற்றும் காவல்படை, ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்துதல், உள்நாட்டு யுத்தம் மற்றும் பல அளவு கோல்கை கொண்டுள்ளது.
(ii) அரசியல் அமைப்பு என்பது, அரசியல் கட்சிகள், அரசாங்கம், அதிகாரத்துவத்தின் அதிகாரம் மற்றும் பற்றாக்குறை, குடிமக்கள் மத்தியில் அரசியல் நகர்வின் நிலை, நிதி நிறுவனங்கள் மற்றும் அவர்களால் வழங்கப்படும் செல்வாக்கு அல்லது ஆதிக்கம் ஆகியவற்றின் நிதியியல் போன்றவற்றை குறிக்கிறது.
(iii) சர்வதேச அரங்கில் தலைவர்கள் மற்றும் நாட்டின் மதிப்பு போன்றவை.
(iv) சட்ட வியாபார கட்டமைப்பு மற்றும் நெகிழ்வுத்தன்மையின் அளவு போன்றவை.
(v) நாட்டின் அரசியலமைப்பு
(vi) சுங்கவரி மற்றும் இலவச வர்த்தகம் குறித்த நாட்டின் வெளியுறவுக் கொள்கை போன்றவை.



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 22 அத்தியாயம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881

## பொருளடக்கம்

22.1. மாற்றுமுறையாவணம் – பொருள், சிறப்பு இயல்புகள், அனுமானங்கள்
22.2. மாற்றுமுறைத்தன்மை மற்றும் உரிமைமாற்றும்
22.3. மாற்றுச்சீட்டு, காசோலை, கடனுறுதிச்சீட்டு ஒப்பீடுகள்
22.4. காசோலை கீறலிடுதல்
22.5. மேலெழுதுதல்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. மாற்றுமுறை ஆவணச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?** *[PTA-3; Sep-2020; Aug-2021]*

அ) 1981 ஆ) 1881
இ) 1994 ஈ) 1818

[விடை: ஆ) 1881]

**2. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் எத்தனை பேர்?** *[PTA-4]*

அ) 2 ஆ) 6 இ) 3 ஈ) 4

[விடை: இ) 3]

**3. மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது?** *[PTA-3]*

அ) கடனுறுதிச் சீட்டு ஆ) மாற்றுச் சீட்டு
இ) காசோலை ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

[விடை: இ) காசோலை]

**4. எது கொணர்பவர் பத்திரமாக இருக்க முடியாது?** *[PTA-4]*

அ) காசோலை ஆ) கடனுறுதிச் சீட்டு
இ) மேற்கூறிய ஏதும் அல்ல ஈ) மாற்றுச் சீட்டு

[விடை: ஆ) கடனுறுதிச் சீட்டு]



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


**5. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?** *[Govt. MQP-2019; PTA-5]*

அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள்

இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதங்கள்

**[விடை: அ) 3 மாதங்கள்]**

## II. குறு வினாக்கள்

**1. மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?** *[Aug-2021]*

மாற்றுமுறை ஆவணம் என்பது ஒரு குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட தொகையை உரிமை வழங்குவதும் மற்றும் மேலெழுதுதல் அல்லது கையில் கொடுப்பது மூலம் ஒரு நபரிடமிருந்து மறறொரு நபருக்கு அதன் உரிமையை மாற்ற ஏதுவான ஆவணம் ஆகும்.

**2. கடனுறுதிச்சீட்டின் சிறப்பு இயல்புகளில் இரண்டினை குறிப்பிடுக.** *[PTA-6]*

(i) கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(ii) பணம் செலுத்த நிபந்தனை அற்ற உறுதி மொழியை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

(iii) உறுதிமொழி நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்.

**3. காசோலை என்றால் என்ன?** *[PTA-4; Sep-2020]*

மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881ன் பிரிவு 6ன்படி வெளிப்படையாக கேட்டாலன்றி வேறு எப்போதும் பணம் தரக்கூடாது என வாடிக்கையாளரால் வங்கியின் மீது எழுதப்படும் மாற்றுச் சீட்டே காசோலை எனப்படும்.

## III. சிறு வினாக்கள்

**1. மாற்றுமுறை மற்றும் உரிமைமாற்றம் இவைகளை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)**

| வ.எண் | வேறுபாடுகள் | மாற்றுமுறைத் தன்மை | உரிமைமாற்றம் |
|---|---|---|---|
| (i) | சட்ட முறை உரிமைமாற்றம் | ஆவண மாற்றுமுறை ஆவணத்தைப் பொறுத்தவரை உரிமையை மேலெழுதித் தருவதன் மூலமாகவோ அல்லது கொணர்பவர் மாற்றுச் சீட்டை வகையில் ஒப்படைப்பதன் மூல மாகவோ உரிமை மாற்றம் செய்ய முடியும். | உரிமை மாற்றும் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட சடங்கு முறைப்படி உரிமை மாற்ற வேண்டும். |
| (ii) | அறிவிப்பு | மாற்றுமுறை ஆவணத்தைக் கொண்ட நபர் கடனாளியிடமிருந்து பணத்தை செலுத்தி கேட்க தேவையில்லை. | உரிமை மாற்றத்தில் உரிமை மாற்றம் பெற்றவர் கடனாளியிடமிருந்து தன்னிடம் கடன் தொகையை செலுத்த அறிவிக்க வேண்டும். |
| (iii) | மறுபயன் | மாற்றுமுறைத் தன்மையில் மறுபயன் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது. | உரிமை மாற்றம் பெற்றவர் மறுபயனை மெய்ப்பிக்க வேண்டும். |

**2. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. (ஏதேனும் 3)** *[PTA-6]*

**மாற்றுச்சீட்டின் சிறப்பியல்புகள் :**

(i) மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.

(ii) மாற்றுச்சீட்டில் "கொடுக்க" என்ற கட்டளை இருக்க வேண்டும்.

(iii) கட்டளை நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்.

(iv) மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம் இடவேண்டும்.


(v) காலச்சீட்டாயின் (time bill) அதனைவிடப் பெறுபவர் ஏற்பு செய்ய வேண்டும்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


3. இரண்டு வகை கீறல்களின் வரைபடத்தை வரைக.




## IV. பெரு வினாக்கள்

1. காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5) *[HY-2019; PTA-3]*

| வ. எண் | வேறுபாடு | மாற்றுச் சீட்டு | காசோலை |
|---|---|---|---|
| (i) | வரையப்படுவது | மாற்றுச் சீட்டு வங்கி உட்பட ஒரு குறிப்பிட்ட நபர் மீது வரையப்படுவது. | ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்படுவது. |
| (ii) | செலுத்தப்படுவது | கேட்டவுடனோ அல்லது குறிப்பிட்ட காலமுதிர்வின் போதோ தருமாறு எழுதப்படுவது. | எப்போதும் கேட்டவுடனே பணம் கொடுக்குமாறு எழுதப்படுவது. |
| (iii) | ஏற்பு | கால மாற்றுச்சீட்டைப் பொறுத்தவரையில் அதை எழுதப் பெற்றவர் ஏற்க வேண்டும். | காசோலையை ஏற்பு செய்திட தேவையில்லை. |
| (iv) | சலுகை நாள் | மாற்றுச்சீட்டின் முதிர்வு காலம் முடிந்த நாளிற்கு பின் பணம் தர மூன்று சலுகை நாட்கள் வழங்கப்படுகிறது. | காசோலைக்கு பணம் தர வங்கிக்கு சலுகை நாட்கள் தரப்படுவதில்லை. |
| (v) | படிகள் | அந்நிய மாற்றுச்சீட்டு மூன்று படிகள் தயாரிக்கப்படுகிறது. | காசோலைக்கு பணம் பெற படிகள் எடுக்க வேண்டிய அவசியமில்லை. |
| (vi) | வருவாய்தலை | மாற்றுச்சீட்டில் வருவாய்தலை அதன் மதிப்பிற்க்கு ஏற்ப ஒட்ட வேண்டும். | காசோலையில் வருவாய்தலை ஒட்ட வேண்டியதில்லை. |

2. காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக. (ஏதேனும் 5) *[PTA-1, 6; Sep-2020]*

**காசோலையின் இயல்புகள் :**

(i) **காசோலை எழுத்து வடிவில் இருக்க வேண்டும் :** காசோலை எழுத்து வடிவில் வரையப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் சட்டமோ அது பென்சிலால் கூட எழுத தடை விதிக்கவில்லை. என்றாலும் மோசடி செய்யும் வாய்ப்பைக் கருதி வங்கியாளர்கள் தாங்களே காசோலையை அச்சிட்டு தருகிறார்கள்.

(ii) **நிபந்தனையற்ற ஆணை :** காசோலையில் வாடிக்கையாளர் பணம் கொடுக்க என கட்டளை பிறப்பிக்க வேண்டும். தயவு செய்து என்ற வார்த்தை இருந்தாலும் காசோலை செல்லும். ஆனால் கட்டளை நிபந்தனைகள் அற்றதாக இருக்க வேண்டும்.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

(iii) **குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்படுதல்:** காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுதமுடியும். அதுவும் ஒரு வங்கியின் எந்தக் கிளையில் வாடிக்கையர் பணம் வைத்துள்ளாரோ சம்மந்தப்பட்ட கிளையில் பணம் கொடுக்குமாறு எழுதவேண்டும். மின்னணு மற்றும் ஒருங்கிணைந்த வங்கி முறை நடைமுறையில் இருக்கும் இந்நாளிலும் எந்த கிளையில் வேண்டுமென்றாலும் பணம் பெறமுடியும்.

(iv) **நிச்சயமான ஒரு தொகை :** வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும் படி ஆணை இடவேண்டும். குறிப்பிட்ட அளவு பிணையம் வெளியிட ஆணை பிறப்பிக்க முடியாது.

(v) **பணம் பெறுபவரைத் திட்டவட்டமாக குறிப்பிட வேண்டும் :** காசோலையை ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணை பெற்றவருக்கு தரும்படி எழுதவேண்டும் அல்லது கொணர்பவர் காசோலை எனின் கொணர்பவருக்கு பணம் தருமாறு ஆணையிடலாம்.

(vi) **கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது:** காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்பட வேண்டும். எப்போது தர வேண்டும் என்ற நாள் குறிப்பிடப்பட்டிருப்பின் கேட்டவுடன் கொடுக்க என்ற கட்டளை தேவையற்றது.

**3. செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளை கூறுக. (ஏதேனும் 5)** *[HY-2019]*

**செல்தகு மேலெழுத்தின் இயல்புகள் :** ஆவணத்தின் முகப்பில் மேலெழுத வேண்டும். மையில் எழுதுவதே நல்லது;

(i) பென்சிலால் அதை அழித்துத் திருத்த ஏதுவாகும். இதனால் மோசடி ஏதும் நடைபெறலாம்.

(ii) மேலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுவது போன்றே மேலெழுத வேண்டும்.

(iii) மேலெழுத்தில் பெயர் எழுதப்பட்டபடியேதான் கையொப்பமும் இருக்க வேண்டும். பெயர் தவறாக எழுதியிருப்பின், கையெழுத்தும் அத்தவறான எழுத்துக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(iv) ஆவணத்தின் முழுமதிப்பிற்கும் மேலெழுதப்படல் வேண்டும். மதிப்பின் ஒரு பகுதிக்கு மேலெழுத்து செய்யப்பட்டிருப்பின் அது செல்லாது.

(v) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறல்வேண்டும்.

(vi) மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால், ஒரு சிறு ஒட்டுத்தாளை ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.

## PTA வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. எந்த கீறல் மாற்றுமுறைத் தன்மையை தடுக்கிறது.** *[PTA-5]*

அ) செலாவணித்தன்மை தடுக்கும் கீறல்
ஆ) பெறுபவர் கணக்கு மட்டும் என்ற கீறல்
இ) பொதுக்கீறல்
ஈ) சிறப்பு கீறல்

**[விடை: அ) செலாவணித்தன்மை தடுக்கும் கீறல்]**

**2. எந்த வகை மேலேழுத்து மேலெழுதுபவரை மாற்றுமுறை ஆவண மறுப்பினால் எழும் பொறுப்பிலிருந்து விடுவிக்கின்றது.** *[HY-2019; PTA-6]*

அ) தடைப்படுத்துதல்
ஆ) கடமைதவிர்
இ) பொறுப்புதவிர்
ஈ) நிபந்தனை

**[விடை: ஆ) கடமைதவிர்]**

**3. எது சரக்கு உரிமை ஆவணம் அல்ல?** *[PTA-6; Sep-2020]*

அ) லாரி ரசீது
ஆ) ரயில் ரசீது
இ) வான் ஊர்தி ரசீது
ஈ) இடாப்பு

**[விடை: ஈ) இடாப்பு]**

### 2 மதிப்பெண்கள்

**1. மாற்றுச்சீட்டு வரையறு.** *[Govt. MQP-2019; PTA-3]*

மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881ல், பிரிவு 5ன் கீழ் ஆவணத்தை கொணர்பவருக்கோ அல்லது அதில் குறிப்பிட்டுள்ள ஒருவருக்கோ அல்லது அவரது ஆணைக்கோ ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துமாறு குறிப்பிட்ட ஒருவரை ஆணையிடும் எழுத்தாலாகிய, விடுப்பவரால் கையொப்பம் இடப்பட்ட நிபந்தனையற்ற ஆணை ஆவணமே மாற்றுச்சீட்டு என வரையறுக்கப்படுகிறது.

**2. மேலெழுதுதல் வரையறு.** *[PTA-5]*

(i) மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 15 மேலெழுத்து என்பதற்கு பின்வருமாறு இலக்கணம் தருகிறது.

(ii) மாற்று முறையாவணத்தை எழுதியவர் அல்லது உடையவர் ஆவண மாற்று செய்ய வேண்டி, எழுதியவர் என்ற நிலையில் அதன் முன்புறமோ அல்லது பின்புறமோ அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தாளிலோ கையொப்பம் இடுதலை மேலெழுதல் என்பர்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## 3 மதிப்பெண்கள்

**1. மாற்றுமுறை ஆவணத்தின் தன்மைகள் யாவை?** *[PTA-3]*

**மாற்றுமுறை ஆவணத்தின் தன்மைகள் :**

(i) **மாற்றித் தரும் தன்மை :** கொணர்பவரின் ஆவணம் மாற்றுமுறையாவணமாக இருப்பின் சாதாரணமாக கொடுப்பதன் மூலமாகவோ அல்லது ஆணைக்கு தரவேண்டிய ஆவணமாக இருப்பின், மேலெழுதி தரும் மாத்திரத்தில் பெற்றவர் உரிமை பெறுகிறார்.

(ii) **உரிமையாளரின் உரிமை பழுதற்றது:** மாற்று முறையாவணத்தை நன்னம்பிக்கையில் மறுபயனுக்கு பெற்றவர் மாற்றுமுறை ஆவணத்தின் மீது மிகச்சிறந்த உரிமையை பெறுகிறார். அதாவது மாற்றியவரின் உரிமையில் குறைபாடு இருப்பினும் மாற்றப்பெறுபவர் மிகச்சிறந்த உரிமையை பெறுகிறார்.

(iii) **மாற்றப் பெற்றவரின் வழக்காடும் உரிமை:** மாற்றுமுறையாவணத்தை மாற்றப்பெற்றவர் மாற்றுமுறை ஆவணத்தின் பெயரில் வசூலிக்க வேண்டிய கடனை வசூலிக்க தனது சொந்த பெயரில் வழக்கு தொடுக்க உரிமை பெற்றவர்; மாற்றுமுறை ஆவணம் மறுக்கப்பட்ட தகவலை கடனாளருக்கு வழங்காமலேயே வழக்கு தொடுக்க உரிமைப் பெற்றவர்.

**2. மாற்றுச் சீட்டு மற்றும் கடனுறுதிச் சீட்டு வேறுபடுத்துக.** *[PTA-4]*

| வ. எண் | வேறுபாடுகளின் இயல்புகள் | மாற்றுச்சீட்டு | கடனுறுதிச் சீட்டு |
|---|---|---|---|
| (i) | உறுதிமொழி தன்மை | மாற்றுச் சீட்டு ஒரு நிபந்தனையற்ற முறையாவணம். | கடனுறுதிச் சீட்டு ஒரு நிபந்தனை அற்ற பணம் தருவதற்கான கடன் உறுதிமொழிப் பத்திரம். |
| (ii) | தரப்பினர் | மாற்றுச் சீட்டில் மூன்று நபர்கள் இருப்பார்கள். வரைபவர், வரையப் பெற்றவர், பணம் பெறுபவர். | கடனுறுதிச் சீட்டில் இரண்டு தரப்பினர் மட்டுமே இருப்பர். வரைபவர் மற்றும் பணம் பெறுபவர். |
| (iii) | வரைபவர் | கடனாளர் மாற்றுச் சீட்டை வரைகிறார். | கடனாளி கடனுறுதிச் சீட்டை வரைகிறார். |
| (iv) | கொணர்பவர் பத்திரம் | மாற்றுச் சீட்டை கொணர்பவருக்கு கொடுக்கும்படி வரையலாம். | கடனுறுதிச் சீட்டை கொணர்பவருக்கு தருவதாக வரையச் சட்டம் தடை செய்கிறது. |
| (v) | ஏற்பு | மாற்றுச்சீட்டை எழுதப் பெற்றவரால் ஏற்கப்பட வேண்டும். | கடனுறுதிச் சீட்டை கடனாளியே எழுதுவதால் அதனை ஏற்க அவசியமில்லை. |

**3. இரண்டு வகை கீறல்களை விவரி.** *[Govt. MQP-2019; PTA-5]*

**கீறலிடலின் வகைகள் :** பொதுக் கீறலிடல். சிறப்பு கீறலிடல்

(i) **பொதுக் கீறலிடல் :** 1881ம் ஆண்டு இந்திய மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 123 பின்வருமாறு பொதுக்கீறலிடலை வரையறை செய்கிறது. இரு இணையான சாய்கோடுகளை மட்டுமோ அல்லது இரண்டு இணையான சாய் கோடுகளினிடையே அண்டு கம்பெனி என்னும் சொற்களையோ அல்லது அவற்றின் சுருக்கத்தையோ கொண்டுள்ள மாற்றுத்தன்மை அற்றது (Not Negoitable) என்ற சொல்லுடனோ அன்றித் தனித்தோ காசோலையில் சேர்த்தால் அச்சேர்க்கை கீறல் என்று கொள்ளப்படும். அக்காசோலை பொதுக் கீறலிடப்பட்டதாகக் கொள்ளப்படும்.

(ii) **சிறப்புக் கீறலிடல் :** ஒரு வங்கியின் பெயரை செலாவணித் தன்மையற்றது என்று சொல்லுடனோ அல்லது தனித்தோ ஒரு காசோலையின் குறுக்கே சேர்த்தால் அது சிறப்புக்கீறல் எனப்படும். அக்காசோலை அந்த வங்கியாரின் பெயரில் சிறப்புக் கீறலிடப்பட்டதாகக் கொள்ளப்படும் என்று 1881ம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 124 வரைவிலக்கணம் வகுக்கிறது.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## 5 மதிப்பெண்கள்

**1. மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள் யாவை?** *[PTA-2; Mar-2020]*

**மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள்:** மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள் அல்லது அனுமானங்கள் பின்வருமாறு:

(i) ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது.

(ii) ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணத்தின் அனுமானமும் ஒப்புக்கொள்வதாகக் கருதப்படுகிறது.

(iii) அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது.

(iv) அது நியாயமான காலத்திற்குள் முதிர்வுக்கு முன்பாக ஏற்கப்பட்டதாக கருதப்படுகிறது.

(v) மாற்றுமுறையாவணம் அதன் முதிர்வு தேதிக்கு முன்பே மாற்றப்பட்டதாக கொள்ளப்படுகிறது.

(vi) மாற்றுமுறையாவணம் காணாமல் போனாலும் முறைப்படி முத்திரை இடப்படுவதாக கருதப்படுகிறது.

(vii) மாற்றுமுறை ஆவணத்தை வைத்துக் கொண்டு இருப்பவர் முறைப்படி உடைமை பெற்றவராக (Holder in Due Course) கருதப்படுகிறார்.

(viii) மாற்றுமுறையாவணத்தில் காணப்படும் அந்த வரிசைப்படி மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதப்பட்டது என கொக்கியிடப்படவேண்டும்.

**2. பல்வேறு மேலெழுத்திடும் முறையின் பிரிவுகளை விவரிக்க.** *[Govt. MQP-2019; PTA-4]*

**மேலெழுத்தின் வகைகள் :**

(i) **வெற்று மேலெழுத்து :** மேலெழுதுபவர் மேலெழுத்து யாருக்காக செய்யப்படுகிறதோ அவர் பெயரைக் குறிப்பிடாமல் தமது கையொப்பத்தை மட்டும் இட்டு மற்றவரிடம் தந்து விடுதல் வெற்று மேலெழுத்தாகும். இம்முறையில் செய்யப்படும் மேலெழுத்து ஆணைக் காசோலையை (order cheque) கொணர்வர் காசோலையாக மாற்றிவிடுகிறது.

(ii) **சிறப்பு மேலெழுத்து :** மேலெழுதுபவர் ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவரது ஆணை பெற்றவருக்கோ செலுத்தும்படி கட்டளை எழுதித் தமது கையொப்பத்தை இடுதல் சிறப்பு மேலெழுத்து என்பர். ஒரு வெற்று மேலெழுத்தைச் சிறப்பு மேலெழுத்தாக மாற்றிக் கொள்ளலாம். வெற்று மேலெழுத்திடப்பட்ட ஆவணத்தை உடையவர் தனது கையொப்பத்தை இடாமல், தனக்கு அல்லது வேறு நபருக்குச் செலுத்த வேண்டும் என்று மேலெழுதுபவரின் கையொப்பத்திற்கு மேல் எழுதி, ஒரு வெற்று மேலெழுத்தைச் சிறப்பு மேலெழுத்தாக மாற்றிக் கொள்ளலாம்.

(iii) **நிபந்தனைக்குட்பட்ட மேலெழுத்து :** மேலெழுதுபவர் பணம் பெற வேண்டிய மேலெழுதப்பட்டவரின் உரிமையை ஒரு நிபந்தனைக்கு உட்படுத்தவும் இயலும். காசோலை என்பது ஒரு நிபந்தனையற்ற ஆவணமாகும். எனினும் மேலெழுதுபவர். மேலெழுதப் பெறுநர் பணம் பெறும் உரிமையை ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்தால்தான் பெறமுடியும் என்று நிபந்தனை விதித்து மேலெழுத்திடல் 'நிபந்தனை மேலெழுத்து' எனப்படும்.

(iv) **வரையறு மேலெழுத்து :** மேலெழுத்து ஆவணத்தை மேலும் ஆவணமாற்றம் செய்யாமல் தவிர்க்க செய்யப்படும் மேலெழுத்து 'வரையறு மேலெழுத்து' எனப்படும்.

(v) **பொறுப்பு தவிர் மேலெழுத்து :** இந்திய மாற்றுமுறை ஆவணச் சட்டம் 52 ஆவது பிரிவின்படி மேலெழுதுபவர் ஆவணத்தின் மீது எழுதப்படும் வெளிப்படையான வார்த்தைகளால் தனது பொறுப்பினைத் தவிர்த்துவிடுதலுக்கு 'பொறுப்புதவிர் மேலெழுத்து' என்று பெயர்.

(vi) **கடமைதவிர் மேலெழுத்து அல்லது உரிமைதவிர் மேலெழுத்து :** ஒரு ஆவணம் மதிப்பு மறுக்கப்படுமானால், அந்த ஆவணத்தை மேலெழுதியவரைப் பொறுப்பாக்க, அம்முறையாவணத்தை உடையவர், மதிப்பு மறுப்பு அறிவிப்பினைத் (Notice of dishonor) தரவேண்டியது அவரது கடமை ஆகும். இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பைப் பெறுவது மேலெழுதப்பட்டவரின் உரிமை ஆகும். இவ்வுரிமையை மேலெழுதியவர் வெளிப்படையாக விட்டுக் கொடுத்துவிடலாம்.

(vii) **பகுதி மேலெழுத்து :** மாற்றுமுறை ஆவணத்தில் உள்ள மேலெழுத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் ஒரு பகுதியை மட்டும் மாற்றுமாறு மேலெழுதப்பட்டால் அதற்கு பகுதி மேலெழுத்து எனப்படும்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# அரசு தேர்வு வினாக்கள்

## 1 மதிப்பெண்

**1. 1881 - ஆம் ஆண்டு இந்திய மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 123 கூறுவது :** *[Mar-2020]*

அ) பொதுக் கீறலிடல்

ஆ) கடனுறுதிச் சீட்டு

இ) சிறப்புக் கீறலிடல்

ஈ) மாற்றுச் சீட்டு

**[விடை: அ) பொதுக் கீறலிடல்]**

## 2 மதிப்பெண்கள்

**1. எழுதப்படிக்கத் தெரியாதவர் ஒரு மாற்றுமுறை ஆவணத்தை எவ்வாறு மேலெழுதுவார்?** *[Mar-2020]*

எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறல் வேண்டும். உறுதி கூறுபவர் முழுமுகவரியைத் தெரிவித்தல் அவசியம்.

## 3 மதிப்பெண்கள்

**1. மாற்று முறை ஆவணத்தில் மேலெழுதிட இடம் போதவில்லையென்றால் எவ்வாறு மேலெழுதலாம்?** *[Mar-2020]*

மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால், ஒரு சிறு ஒட்டுத்தாளை ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.

# கூடுதல் வினாக்கள்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 1 மதிப்பெண்**

**கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. எந்த சட்டம் வாக்குறுதித்தாள், மாற்றுச்சீட்டு மற்றும் காசோலை இவைகளை பற்றி இயம்புகிறது?**

அ) மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881

ஆ) இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872

இ) பொருட்கள் விற்பனைச் சட்டம் 1982

ஈ) வணிகக்குறிகள் சட்டம் 1999

**[விடை: அ) மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881]**

**2. எழுத்து வடிவிலான ஆவணத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட நபருக்கு உரிமையை ஈட்டித்தரும் செயல் எது?**

அ) காசோலை

ஆ) மாற்றுச்சீட்டு

இ) கடனுறுதிச் சீட்டு

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: ஆ) மாற்றுச்சீட்டு]**

**3. கட்டளை நிபந்தனைகள் அற்றதாக இருக்க வேண்டியது எது?**

அ) சான்றுச்சீட்டு

ஆ) காசோலை

இ) இடாப்பு

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: ஆ) காசோலை]**

**4. பொதுக் கீறலிடலில் எத்தனை சாய்ந்த இணைக் கோடுகள் இருக்க வேண்டும்?**

அ) ஒன்று ஆ) இரண்டு

இ) மூன்று ஈ) நான்கு

**[விடை: ஆ) இரண்டு]**

**5. எந்தக் காசோலைக்கு இணைக்கோடுகள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை?**

அ) பொதுக் கீறலிடப்பட்ட

ஆ) சிறப்பு கீறலிடப்பட்ட

இ) இரண்டும்

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: ஆ) சிறப்பு கீறலிடப்பட்ட]**

**6. மேலெழுதுபவர் மேலேழுத்து யாருக்காக செய்யப்படுகிறதோ அவர் பெயரைக் குறிப்பிடாமல் தமது கையொப்பத்தை மட்டும் இட்டு மாற்றவரிடம் தந்து விடுதல்**

அ) வெற்று மேலெழுத்து

ஆ) சிறப்பு மேலேழுத்து

இ) நிபந்தனைக்குட்பட்ட மேலெழுத்து

ஈ) வரையறு மேலெழுத்து

**[விடை: அ) வெற்று மேலெழுத்து]**

**7. எந்த மேலெழுத்தைச் சிறப்பு மேலெழுத்தாக மாற்றிக் கொள்ளலாம்?**

அ) சிறப்பு மேலெழுத்து

ஆ) வெற்று மேலெழுத்து

இ) நிபந்தனைக்குட்பட்ட மேலெழுத்து

ஈ) வரையறு மேலெழுத்து

**[விடை: ஆ) சிறப்பு மேலெழுத்து]**


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


8. **எழுதிய ஆவணம் கடனுறுதிச் சீட்டா அல்லது மாற்றுச் சீட்டா என்று அறிய முடியாத ஆவணம்**
அ) கொணர்பவர் ஆவணம்
ஆ) ஆணை ஆவணம்
இ) வெளிநாட்டு ஆவணம்
ஈ) தெளிவில்லா ஆவணம்
**[விடை: ஈ) தெளிவில்லா ஆவணம்]**

9. **எழுதா ஒரு விதத்தில் தொக்கி நிற்கும் ஆவணம்**
அ) முழுமை பெறாத ஆவணம்
ஆ) கொணர்பவர் ஆவணம்
இ) வெளிநாட்டு ஆவணம்
ஈ) தெளிவில்லா ஆவணம்
**[விடை: அ) முழுமை பெறாத ஆவணம்]**

10. **எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பணம் செலுத்துமாறு வரையப்படும் ஆவணம்**
அ) நேர ஆவணம்
ஆ) பண வசதி மாற்றுச் சீட்டு
இ) ஆவண மாற்றுச் சீட்டு
ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[விடை: அ) நேர ஆவணம்]**

11. **ஒருவருக்கு உதவும் நோக்குடன் மறுபயன் இன்றி வரையப்படுவது.**
அ) முழுமை பெறாத ஆவணம்
ஆ) தூய மாற்றுச்சீட்டு
இ) பண வசதி மாற்றுச் சீட்டு
ஈ) ஆவண மாற்றுச்சீட்டு
**[விடை: இ) பண வசதி மாற்றுச் சீட்டு]**

12. **லாரி ரசீது, இரயில் இரசீது போன்றவை எதற்கு உதாரணங்களாகும்?**
அ) முழுமை பெறாத ஆவணம்
ஆ) தூய மாற்றுச்சீட்டு
இ) பண வசதி மாற்றுச் சீட்டு
ஈ) ஆவண மாற்றுச்சீட்டு
**[விடை: ஈ) ஆவண மாற்றுச்சீட்டு]**

13. **சரக்குரிமை அதாவது இரயில் ரசீது, கப்பல் ரசீது ஆவணத்தை இணைக்காமல் வரையப்படும் மாற்றுச்சீட்டு**
அ) தூய மாற்றுச்சீட்டு
ஆ) முழுமை பெறாத ஆவணம்
இ) பண வசதி மாற்றுச் சீட்டு
ஈ) ஆவண மாற்றுச்சீட்டு
**[விடை: அ) தூய மாற்றுச்சீட்டு]**

14. **ஆறு மாதத்திற்கு மேலாக புழக்கத்திலுள்ள காசோலை பின்வருமாறு அழைக்கப்படுகிறது.**
அ) காலக்கெடு முடிந்த காசோலை
ஆ) பின் தேதியிட்ட காசோலை
இ) சாதாரண காசோலை
ஈ) கீறலிட்ட காசோலை
**[விடை: அ) காலக்கெடு முடிந்த காசேலை]**

15. **ஒரு காசோலையில் குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ பணம் வழங்க வேண்டிய காசோலைக்கு பெயர்**
அ) சாதாரண காசோலை
ஆ) ஆணை காசோலை
இ) கீறிலிட்ட காசோலை
ஈ) பின் தேதியிடே காசோலை
**[விடை: ஆ) ஆணை காசேலை]**

16. **கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஆவணம் சாதாரணமாக கைமாற்றிக் கொள்வதன் மூலம் மாற்றிக் கொள்ள முடியும்.**
அ) ஆணை ஆவணம்
ஆ) கொணர்பவர் ஆவணம்
இ) மேற்கூறிய இரண்டும்
ஈ) மேற்கூறிய இரண்டும் இல்லை
**[விடை: ஆ) கொணர்பவர் ஆவணம்]**

17. **மாற்றப் பெறுநர் யார்?**
அ) ஆவணத்தை மாற்றுபவர்
ஆ) யார் பெயரில் மாற்றப்படுகிறதோ அவர்
இ) பணம் பெறுபவர்
ஈ) மேற்கூறிய எவரும் இல்லை
**[விடை: ஆ) யார் பெயரில் மாற்றப்படுகிறதோ அவர்]**

**பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

1.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| i. | ஆவணம் | 1. | கடனாளி |
| ii. | காசோலை | 2. | மூன்று நபர்கள் |
| iii. | கடனுறுதிச் சீட்டு | 3. | நிபந்தனையற்ற ஆணை |
| iv. | மாற்றுச் சீட்டு | 4. | உரிமையை மாற்ற ஏதுவானது |




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


தொகுப்பு:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

[விடை: அ) (i)-4, (ii)-3, (iii)-1, (iv)-2]

2.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| i. | பொதுக் கீறலிடல் | 1. | தாளில் கையொப்பமிடல் |
| ii. | சிறப்புக் கீறலிடல் | 2. | கடனாளர் |
| iii. | மேலெழுதுதல் | 3. | பெறுதற்குரியரின் கணக்கு |
| iv. | மாற்றுச்சீட்டு | 4. | மாற்றுத் தன்மை அற்றது |

தொகுப்பு:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 1 | 2 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

[விடை: ஆ) (i)-4, (ii)-3, (iii)-1, (iv)-2]

**கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **_______ என்பது மறுபயன் பெற்று ஆவணத்தை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுவது.**
அ) மாற்றுமுறைமை
ஆ) பெறுதற்குரிய சீட்டு
இ) செலுத்தற்குரிய சீட்டு
ஈ) மாற்றுச் சீட்டு
[விடை: அ) மாற்றுமுறைமை]

2. **மாற்றுமுறை ஆவணங்கள் தொடர்பான சட்ட நுணுக்கங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம் _______ ல் குறிப்பிடப்பட்டுள்ளது.**
அ) 1880 ஆ) 1881
இ) 1886 ஈ) 1887
[விடை: ஆ) 1881]

3. **_______ எழுத்து வடிவில் வரையப்பட்டு இருக்க வேண்டும்.**
அ) சான்றுச்சீட்டு ஆ) இடாப்பு
இ) காசோலை
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: இ) காசோலை]

4. **_______ ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும்.**
அ) சான்றுச்சீட்டு
ஆ) காசோலை
இ) இடாப்பு
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: ஆ) காசோலை]

5. **_______ வங்கி உட்பட ஒரு குறிப்பிட்ட நபர் மீது வரையப்படுகிறது.**
அ) மாற்றுச்சீட்டு
ஆ) இரயில்வே ரசீது
இ) இடாப்பு
ஈ) காசோலை
[விடை: அ) மாற்றுச்சீட்டு]

6. **காசோலையில் _______ தரப்பினர்கள் உள்ளனர்.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து
[விடை: ஆ) மூன்று]

7. **கடனுறுதிச் சீட்டில் _______ தரப்பினர் மட்டுமே இருப்பர்.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து
[விடை: அ) இரண்டு]

8. **_______ மாற்றுச் சீட்டை வரைகிறார்.**
அ) கடனாளர் ஆ) கடனாளி
இ) வங்கியர் ஈ) மேலாளர்
[விடை: அ) கடனாளர்]

9. **_______ கடனுறுதிச் சீட்டை வரைகிறார்.**
அ) கடனாளர் ஆ) கடனாளி
இ) வங்கியர் ஈ) மேலாளர்
[விடை: ஆ) கடனாளி]

10. **அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகள் _______ படிகளில் வரையப்படுகிறது.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து
[விடை: ஆ) மூன்று]

11. **இணைக்கோடுகள் _______ முகப்பில் இடப்பட்டிருக்க வேண்டும்.**
அ) காசோலையின் ஆ) இடாப்பு
இ) இரயில்வே இரசீதின்
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: அ) காசோலையின்]


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# அலகு 9 தொழில் முனைவு மேம்பாடு

# 23 அத்தியாயம் தொழில் முனைவுக்கான அடிப்படைக் கூறுகள்

## பொருளடக்கம்

23.1. தொழில் முனைவு: பொருள், கருத்து மற்றும் இலக்கணம்
23.2. தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள்
23.3. தொழில் முனைவின் முக்கியத்துவம்
23.4. தொழில் முனைவோர், அக செயல் முனைவோர் மற்றும் மேலாளர் – ஒப்பீடு
23.5. மகளிர் தொழில் முனைவோர்கள்
23.6. தொழில் முனைவோரின் பணிகள்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக் காரணி?** *[Aug-2021]*

அ) நிலம் ஆ) உழைப்பு
இ) தொழில்முனை ஈ) மேற்கூறிய அனைத்தும்

**[விடை: ஈ) மேற்கூறிய அனைத்தும்]**

**2. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?**

அ) இடர்தாங்கி ஆ) புதுமைபடைப்பவர்
இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

**[விடை: இ) ஊழியர்]**

**3. கீழ் குறிப்பிட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?**

அ) துணிகர உணர்வு ஆ) நெளிவு சுளிவு
இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்

**[விடை: ஈ) அனைத்தும்]**



orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

**4. கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது மேலாண்பணி அல்ல?**

அ) திட்டமிடல் ஆ) சந்தையிடல்

இ) அமைப்பாற்றல்

ஈ) கட்டுப்பாடு காத்தல்

[**விடை: ஆ) சந்தையிடல்**]

**5. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் எது வணிகப் பணியை சார்ந்தது?**

அ) கணக்கியல் பணி

ஆ) ஒருங்கிணைப்பு

இ) வாய்ப்பை கண்டறிதல்

ஈ) திட்டமிடல் [**விடை: அ) கணக்கியல் பணி**]

## II. குறு வினாக்கள்

**1. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் இரண்டினை குறிப்பிடுக.** *[PTA-6]*

(i) **தொழில் துணிகர உணர்வு :** தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் இடர்களை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்.

(ii) **தன்னம்பிக்கை :** தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது. எதிர்மறை உணர்வுகளான அசௌகரியங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் தொல்லைகள் தொழில் முனைபவரது மன உறுதியை குலைக்கக்கூடாது.

**2. தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக. (ஏதேனும் 2)**

(i) திட்டம் தீட்டல்

(ii) அமைப்பு பணி

(iii) கட்டளை இடல்

(iv) கட்டுப்பாடு காத்தல்

(v) ஒருங்கிணைப்பு

**3. தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 2)**

(i) வாய்ப்புகளை கண்டறிதல்.

(ii) தொழிலின் நோக்கத்தினை தீர்மானித்தல்.

(iii) ஆழ்ந்த பகுப்பாய்வு.

(iv) தொழில் நிறுமத்தின் அமைப்பு முறையினை தேர்வு செய்வது.

(v) தொழில் துவங்கும் சடங்கு முறைகள்

(vi) தொழில் திட்டம் தயாரித்த செயல்

(vii) நிதி திரட்டுவது

(viii) கருவிகலன்கள் மற்றும் கச்சா பொருட்கள் பெறுதல்.

**4. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் சிக்கல்களை எழுதுக.** *[Aug-2021]*

(i) நிதிப்பிரச்சினை.

(ii) இயக்கத்தடை

(iii) கல்வியறிவு இன்மை

(iv) ஆதரவு இன்மை

(v) கடும்போட்டி

(vi) உணர்ச்சி வயப்படல்

(vii) போதிய விவரமின்மை

(viii) சார்ந்து வாழும் கலாச்சாரம்.

## III. சிறு வினாக்கள்

**1. தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுத்தி காட்டுக. (ஏதேனும் 3)** *[PTA-1, Aug-2021]*

| வ.எண் | அடிப்படை | தொழில் முனைபவர் | மேலாளர் |
|---|---|---|---|
| (i) | நோக்கு | ஒரு அமைப்பினை தேர்ந்தெடுத்து தன்னுடைய வினையை துவக்குவது. | துவக்கிய வினையில் செவ்வனே பணியாற்றுவது இவரின் நோக்கு. |
| (ii) | தகுநிலை | தொழில் முனைபவர் தான் துவங்கிய அமைப்பின் உரிமையாளர். | மேலாளர் ஊதியம் பெறும் உழைப்பாளி. |
| (iii) | இடர் ஏற்றல் | தொழில் முனைபவர் தான் துவங்கிய வினையினால் ஏற்படும் இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மையை தாங்குபவர். | மேலாளர்கள் வினையின் இடரில் பங்கு பெறுவது இல்லை. மாறாக இடர் ஏற்படும்போது வேறு நிறுமத்திற்கு தாவி விடும் பருவகால நண்பர்கள். |


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

| | | | |
|---|---|---|---|
| (iv) | வெகுமதி | தொழில் முனைபவர் தன்னுடைய இடர் ஏற்பிற்கு வெகுமதியாக இலாபத்தை பெறுகின்றனர். | மேலாளர்கள் இலாபத்தில் பங்கு பெறுவது இல்லை. ஊதியம் மேலூதியம், படிகள், ஊக்க ஊதியம் பெறுபவர்கள். |
| (v) | ஆற்றல் | தொழில் முனைபவர்கள் படைப்பாற்றல், உள்ளுணர்வு மற்றும் எதையாவது புதியதாக செய்ய வேண்டும் என்ற உந்துதல் பெற்றவர்கள். | மேலாளர்கள் நல்ல கோட்பாட்டு அறிவும், மனித உறவு திறனும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். |

**2. தொழில் முனைவோரின் வணிகப் பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 3)** *[Aug-2021]*

(i) **உற்பத்தி அல்லது தயாரிப்பு பணி:** உற்பத்தி பணியை பொறுத்தவரை தொழில் முனைவோர் எந்த இடத்தில் தொழிலை நிறுவுவது; தொழிலை நிறுவிய இடத்தின் உள் அமைப்பு எப்படி இருக்க வேண்டும்; என்ன பொருளை தயாரிக்க வேண்டும். எந்த அளவு உற்பத்தி பொருட்கள் இருக்கவேண்டும். பொருளின் வடிவம் எப்படி இருக்க வேண்டும். போன்ற உற்பத்தி தொடர்பான பணிகளை முடிவு செய்து செயலில் இறங்க வேண்டும்.

(ii) **சந்தையிடுகை :** சந்தையிடுகை என்ற சொல் பொருள் உற்பத்திக்கு முன்பே தொடங்கி பொருளை உற்பத்தி செய்த பின் வாடிக்கையாளர் வசம் கொண்டு சேர்க்கும் வரையிலான ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய சொல். பொருளின் விற்பனையை கூட்ட விற்பனையை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளல், விளம்பரம் செய்தல், பொருளை விற்க விற்பாண்மையரை அமர்த்தல் போன்ற பல பணிகளை தொழில் முனைவோர் செய்ய வேண்டும்.

(iii) **கணக்கியல் பணி :** கணக்கியல் பணி என்பது கணக்கு வழக்கு பார்க்கும் பணி. அதாவது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொண்ட தொழில் முயற்சியில் இலாபம் வந்துள்ளதா அல்லது நட்டம் வந்துள்ளதா எனவும் குறிப்பிட்ட நாளில் முனைந்த தொழிலின் நிதி நிலை எப்படி உள்ளது அதாவது வைப்பு சொத்துக்களின் மதிப்பு என்ன? பொறுப்புகளின் மதிப்பு எண் மூலதனம் எவ்வளவு கூடியுள்ளது அல்லது குறைந்துள்ளது. பிறருக்கு தரவேண்டிய பொறுப்புகள் எவ்வளவு என அறிய இருப்புநிலை குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்கு தயாரிக்கும் பணியையும் தொழில் முனைவோர் மேற்கொள்ள வேண்டும்.

**3. தொழில் முனைவோரின் தோற்றுவிக்கும் பணிகளைக் கூறுக. (ஏதேனும் 3)**

(i) **வாய்ப்புகளை கண்டறிதல் :** எந்தெந்த தொழிலில் நுழைந்தால் என்னென்ன வாய்ப்புகள் கிட்டும் என எப்போதும் சிந்திக்க வேண்டும். தொழில் துவங்கும் எண்ணம் சுயமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ அரும்பலாம். எனவே எந்த செயல்வினை பலனளிக்கும் என சீராய்ந்து ஒன்றை தெரிவு செய்வது முதல் பணியாகும்.

(ii) **தொழிலின் நோக்கத்தினை தீர்மானித்தல்:** தான் நுழைந்த தொழிலின் தன்மை, மற்றும் தொழிலின் வகை அதாவது உற்பத்தி செயலா அல்லது வணிகச் செயலா என்பதை மனதில் வைத்தும், தொழிலினை செயலாக்க தேர்வு செய்யப்பட்ட தொழில் அமைப்பு முறையினை மனதில் கொண்டும் தொழில் நிறுமத்தின் நோக்கத்தினை தீர்மானிக்க வேண்டும்.

(iii) **ஆழ்ந்த பகுப்பாய்வு :** தொழில் முனைபவர் உற்பத்தி செய்ய அல்லது விற்பனை செய்ய விரும்பும் பொருளினை பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். உத்தேசித்த பொருளின் சந்தை வாய்ப்பு அதாவது தேவை எப்படி உள்ளது. அந்த பொருளை வெற்றிகரமாக உற்பத்தி செய்ய முடியுமா என்று தீவரமாக ஆய்வில் இறங்க வேண்டும்.

(iv) **தொழில் நிறுமத்தின் அமைப்பு முறையினை தேர்வு செய்வது :** தொழில் முனைவோர் தான் துவங்க விரும்பும் வினையினை செயல்படுத்த பொருத்தமான தொழில் அமைப்பு முறையை தீர்மானிக்க வேண்டும். அதாவது தனியாள் வணிகமா, கூட்டாண்மை வியாபார நிறுமமா அல்லது கூட்டுறவு அமைப்பா என்பதை முடிவு செய்திடல் வேண்டும்.




orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores


## IV. பெருவிடை வினாக்கள்

**1. தொழில் முனைவோரின் சிறப்பு இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)** *[PTA-6]*

**தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள் :**

(i) **தொழில் துணிகர உணர்வு :** தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் இடர்களை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். வினையை நடத்தி வரும்போது ஏற்படும் இயற்கையான ஏமாற்றங்கள் அல்லது தோல்விகள் அவரின் ஆர்வத்தை சிதைக்கா வண்ணம் துணிவுடன் செயல்படுவோர் ஆவார்.

(ii) **தன்னம்பிக்கை :** தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது. எதிர்மறை உணர்வுகளான அசௌகரியங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் தொல்லைகள் தொழில் முனைபவரது மன உறுதியை குலைக்கக் கூடாது.

(iii) **நெகிழ்வு தன்மை :** மாறும் சூழ்நிலைகட்கு ஏற்ப தொழில் முனைபவன் தன் முடிவை அல்லது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளும் நெகிழ்வு தன்மையை கடைப்பிடிக்க வேண்டும். நெகிழ்வு தன்மை அற்றவர்கள் தொழில் முனைவில் வெற்றி காண்பது இயலாத ஒன்றாதும்.

(iv) **புதுமை புகுத்தல் :** தொழில் முனைபவர் புதுமை படைப்பாளராக இருந்திட வேண்டும். ஏதேனும் ஒரு புதுமையைப் புகுத்தி சந்தையில் நிரந்தரமான இடத்தை பிடிக்க வேண்டும். புதுமை என்பது புத்தம் புதிய பொருளாகவோ, புதுமை பண்புகளை பொருளில் நுழைப்பதோ, புதிய சந்தையை உருவாக்குவதோ, புதிய கச்சா பொருளை கொண்டு பொருளை உற்பத்தி செய்வதோ, புதிய உற்பத்தி முறையை கையாள்வதோ மற்றும் புதிய நுட்பத்தை மேற்கொள்வது.

(v) **வளத்தை திரட்டுபவர் :**

- தான் மேற்கொண்ட செயலை செயலாக்கிட தொழில் முனைபவர் புலனாகக்கூடிய மற்றும் புலனாகாத உட்பொருட்களையும் ஒன்றிணைப்பவர் ஆவார்.
- தொழிலை துவக்கிட இடு பொருளை வாங்குதல், மனித வளத்தை திரட்டுதல், நிதியை புரட்டுதல், போன்ற நடவடிக்கைகளை நாட்டின் மூலை முடுக்குகளுக்கு சென்று சேரும் வகையில் பொருளை உற்பத்தி சந்தையிடுகைக்கு கொண்டு சேர்க்கும் செயலை செய்பவர் ஆவார்.

(vi) **கடின உழைப்பு :** தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட செயலியின் நோக்கத்தை அடைய அரும்பாடு படவேண்டும். தொல்லைகள், இடர்கள், அசௌகரியங்கள், இன்னல்கள் மற்றும் ஏமாற்றங்கள் என அவ்வப்போது ஏற்படும் இடர்களை தளராமல் மேற்கொள்ளுதல். தலைவிதியின் மீது பழிபோடுவதோ அல்லது பிறவற்றின் மீது பழி சுமத்தி சுகம் காண்பவராகவோ இருக்கக் கூடாது.

**2. தொழில் முனைவோர் மற்றும் அகத்தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)** *[Mar-2020; Aug-2021]*

| | அடிப்படை | தொழில் முனைபவர் | அகத்தொழில் முனைபவர் |
|---|---|---|---|
| (i) | சிந்தனை | தொழில் முனைபவர் ஒரு தடையற்ற சிந்தனை வாசி. | அகத்தொழில் முனைபவர் தன்னிச்சையான சிந்தனைவாதி, ஆனால் ஒரு தொழில் நிறுமத்தின் உள் செயல்படுபவர். |
| (ii) | சார்புநிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்து இருப்பவர். |
| (iii) | நிதி திரட்டல் | தொழில் முனைவோர் தன் சொந்த முயற்சியில் தொழிலுக்கான நிதியை திரட்ட வேண்டும். | இவருக்கு நிதி திரட்டும் பொறுப்பு இல்லை. ஆனால் திரட்டிய நிதியை கையாளும் பொறுப்பு உள்ளது. |
| (iv) | வெகுமதி | தொழில் முனைவோர் தங்களின் இடர் ஏற்பு பணிக்காக இலாபம் என்ற வெகுமதியை பெறுகின்றனர். | அகதொழில் முனைவோர்க்கு இலாபத்தில் பங்கு இல்லை. ஆனால் ஊதியம், ஊக்க ஊதியம் மற்றும் மேம்படிகள் பெற வாய்ப்பு உண்டு. |


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

வணிகமா, கூட்டாண்மை வியாபார நிறுமமா அல்லது கூட்டுறவு அமைப்பா என்பதை முடிவு செய்திடல் வேண்டும்.

**மேலாண்மைப் பணிகள் :**

(i) **திட்டம் தீட்டல் :** மேற்கொண்ட தொழில் வினை தன்னுடைய இறுதி இலக்கினை நோக்கிச் செவ்வனே பயணிக்க நோக்கங்கள், இலக்குகள், தொலைநோக்கு செயல்முறைகள், காலத்திட்டம் எண்குறித் திட்டம் (budget) நிகழ்வுத்திட்டம் (program) போன்றவற்றை வகுக்கவேண்டும்.

(ii) **அமைப்பு பணி :** தொழில் முனைவோர் தொழில் திட்டத்தினை அரங்கேற்ற தேவைப்படும் தொழில் அமைப்பினைத் தேர்வு செய்தல், அதன் அக கட்டமைப்பு முறையை வடிவமைத்தல், துறைகளை உருவாக்குதல், அதிகார ஒப்புடைவு செய்தல், அதிகார மையமாக்குதல் அல்லது பரவலாக்குதல், மேற்பார்வை வீச்செல்லையை முடிவு செய்தல் தேவைப்படும் பணியர்களைப் பணி அமர்த்தல் அவர்களிடையே உறவுமுறைகளை ஏற்படுத்தி பொறுப்பாக்குதல் போன்ற அலுவலக நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டும்.

(iii) **கட்டளை இடல் :** கட்டளை இடல் பணியைப் பொறுத்த வரை தொழில் முனைவோர் தன்னிடம் பணிபுரியும் ஊழியர்களை வழிநடத்திச் செல்லவேண்டும். வினையின் நோக்கினை எய்திட ஊழியர்களுக்குச் செயல் ஊக்கம் தரவேண்டும். கட்டளைகள் மற்றும் இலக்குகளை அடைய முறையான செய்தி மற்றும் தகவல் ஓட்டத்தை அமைப்பிற்குள் ஏற்படுத்த வேண்டும்.

(iv) **கட்டுப்பாடு காத்தல்:** தொழில் முனைவோர் தன்னுடைய ஊழியர்களின் பணி செயல்பாட்டை மதிப்பிட மற்றும் அனைத்துப் பணிகளும் செவ்வனே அரங்கேறுகிறதா என உறுதி செய்ய தேவையான கட்டுப்பாட்டு முறையினைப் புகுத்தல் வேண்டும்.

**வணிகப் பணிகள் :**

(i) **உற்பத்தி அல்லது தயாரிப்பு பணி :** உற்பத்தி பணியை பொறுத்தவரை தொழில் முனைவோர் எந்த இடத்தில் தொழிலை நிறுவுவது; தொழிலை நிறுவிய இடத்தின் உள் அமைப்பு எப்பப்படி இருக்கவேண்டும்; என்னப் பொருளை தயாரிக்க வேண்டும். எந்த அளவு உற்பத்தி பொருட்கள் இருக்கவேண்டும். பொருளின் வடிவம் எப்படி இருக்க வேண்டும் போன்ற உற்பத்தி தொடர்பான பணிகளை முடிவு செய்து செயலில் இறங்கவேண்டும்.

(ii) **சந்தையிடுகை :** சந்தையிடுகை என்ற சொல் பொருள் உற்பத்திக்கு முன்பே தொடங்கி பொருளை உற்பத்தி செய்த பின் வாடிக்கையாளர் வசம் கொண்டு சேர்க்கும் வரையிலான ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய சொல். விற்பனை என்ற சொல் சந்தையிடுகை பணியின் ஒரு முக்கிய அங்கம்.

(iii) **கணக்கியல் பணி :** கணக்கியல் பணி என்பது கணக்கு வழக்கு பார்க்கும் பணி. அதாவது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொண்ட தொழில் முயற்சியில் இலாபம் வந்துள்ளதா அல்லது நட்டம் வந்துள்ளதா எனவும் குறிப்பிட்ட நாளில் முனைந்த தொழிலின் நிதி நிலை எப்படி உள்ளது அதாவது வைப்பு சொத்துக்களின் மதிப்பு என்ன, பொறுப்புகளின் மதிப்பு என்ன, மூலதனம் எவ்வளவு கூடியுள்ளது அல்லது குறைந்துள்ளது, பிறருக்கு தரவேண்டிய பொறுப்புகள் எவ்வளவு என அறிய இருப்புநிலை குறிப்பு மற்றும் இலாப நட்டக்கணக்கு தயாரிக்கும் பணியையும் தொழில் முனைவோர் மேற்கொள்ள வேண்டும்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 2 மதிப்பெண்கள்

1. **தொழில் முனைபவருக்கு பகுப்பாய்வுத் திறன் ஏன் அவசியம்?** *[Mar-2020]*

தொழில் முனைபவர் பாரபட்சமின்றி விருப்பு வெறுப்புகளை தவிர்த்து சமநிலையில் முழு மனதுடன் மேற்கொள்ள வேண்டும். அவசர நிலையில் எடுக்கும் முடிவுகள் இலக்கை அடைய வழிவகுக்காது. எனவே எந்த ஒரு முடிவை மேற்கொண்டாலும் சம்மந்தப்பட்ட காரணிகளை சீர்தூக்கி பகுத்தாய்ந்து ஒரு தெள்ளிய முடிவை மேற்கொள்ள வேண்டும். எனவே ஓர் நல்ல பகுத்தறிபவராக தொழில்முனைவோர் இருத்தல் வேண்டும்.





orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 1 மதிப்பெண்**

**கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அச்சாணியாக விளங்குவது எது?**
அ) தொழில் முனைவு
ஆ) சந்தை
இ) உற்பத்தி
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: அ) தொழில் முனைவு]

**2. தொழில் முனைவு என்ற சொல் எந்த மொழி சொல்?**
அ) தமிழ் ஆ) ஆங்கிலம்
இ) பிரெஞ்சு ஈ) இத்தாலி
[விடை: இ) பிரெஞ்சு]

**3. தொழில் முனைவோர் என்பவர் இடரை தாங்கும் இடர் தாங்கி என வருணிப்பவர் யார்?**
அ) ஜின் பேப்டைஸ் ஆ) ஹூம் பீட்டர்
இ) ரிச்சர்டு சேன்டில்யன்
ஈ) ஏ.எச். கோல்
[விடை: இ) ரிச்சர்டு சேன்டில்யன்]

**4. தொழில் முனைபவரை புதின படைப்பாளி என அழைப்பவர் யார்?**
அ) ஜின் பேப்டைஸ்
ஆ) ரிச்சர்டு சேன்டில்யன்
இ) ஹூம் பீட்டர்
ஈ) A.H . கோல் [விடை: இ) ஹூம் பீட்டர்]

**5. நிறுமத்தின் உட்புறம் புதிய பொருட்களையும் கருத்துகளையும் அறிமுகப்படுத்துவர் யார்?**
அ) மேலாளர்
ஆ) இயக்குநர்
இ) பணியாளர்
ஈ) அகத்தொழில் முனைவோர்
[விடை: ஈ) அகத்தொழில் முனைவோர்]

**6. யாருக்கு இலாபத்தில் பங்கு இல்லை?**
அ) அகத்தொழில் முனைவோர்
ஆ) மேலாளர்
இ) இயக்குநர் ஈ) பணியாளர்
[விடை: அ) அகத்தொழில் முனைவோர்]

**7. துவக்கிய வினையில் செவ்வனே பணியாற்றுவது யாருடைய நோக்கம்?**
அ) தொழில் முனைபவர்
ஆ) மேலாளர்
இ) இயக்குனர்
ஈ) கடனாளர் [விடை: ஆ) மேலாளர்]

**8. ஐந்தில் ஒரு பங்கு மகளிரால் நடத்தப்படும் நிறுவனம் எங்குள்ளது?**
அ) அமெரிக்கா ஆ) பிரான்ஸில்
இ) கனடா
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: ஆ) பிரான்ஸில்]

**9. எந்த வியாபாரம் அமைக்க சடங்கு முறை ஒன்றும் பெரியதாக இல்லை?**
அ) தனியாள் வணிகம்
ஆ) கூட்டாண்மை
இ) அரசு நிறுமம்
ஈ) கூட்டுறவுச் சங்கம்
[விடை: அ) தனியாள் வணிகம்]

**பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II–உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

**1.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| i. | இடர் ஏற்பாளர் | 1. | ஹூம் பீட்டர் |
| ii. | அமைப்பாளர் | 2. | நிலம், உழைப்பு |
| iii. | புதுமைபித்தன் | 3. | ஜின் பேப்டைஸ் |
| iv. | உற்பத்தி காரணி | 4. | ரிச்சர்டு சேன்டில்யன் |

தொகுப்பு:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 1 | 2 |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

[விடை: ஆ) (i)-4, (ii)-3, (iii)-1, (iv)-2]

**கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. _______ நூற்றாண்டின் துவக்கத்தில் தொழில் முனைதல் என்ற சொல்லை பொருளாதார துறையில் பயன்படுத்த துவக்கினர்.**
அ) பதினேழாம்
ஆ) பதினெட்டாம்
இ) பத்தொன்பதாம்
ஈ) இருபதாம் [விடை: ஆ) பதினெட்டாம்]

**2. _______ என்ற அறிஞரின் பார்வையில் தொழில் முனைவோர் ஒரு அமைப்பாளராக தென்படுகிறார்.**
அ) ஜின் பேப்படைஸ் ஆ) ஹூம் பீட்டர்
இ) ரிச்சர்டு சேன்டில்யன்
ஈ) A.H. கோல்
[விடை: அ) ஜின் பேப்படைஸ்]


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



3. _______ ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது.
அ) துணிகர உணர்வு
ஆ) தன்னம்பிக்கை
இ) நெகிழ்வு தன்மை
ஈ) புதுமை புகுத்தல்
**[விடை: ஆ) தன்னம்பிக்கை]**

4. நாட்டின் _______ வளர்ச்சிக்கு தொழில் முனைவு ஒரு கருவியாக விளங்குகிறது.
அ) ஏற்றுமதி ஆ) இறக்குமதி
இ) வட்டார ஈ) வாழ்க்கைக்கு
**[விடை: அ) ஏற்றுமதி]**

5. _______ என்பவர் நிறுமத் தொழில் முனைவோரைப் போன்றே செயல்படுவர்.
அ) மேலாளர்
ஆ) இயக்குநர்
இ) அகத்தொழில் முனைவோர்
ஈ) பண்பாளர்
**[விடை: இ) அகத்தொழில் முனைவோர்]**

6. மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழில்வினையில் ஏற்படும் _______ சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக விளங்குகிறது.
அ) நிதிப் பற்றாக்குறையை
ஆ) கல்வியறிவின்மையை
இ) கடும்போட்டியை
ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[விடை: அ) நிதிப் பற்றாக்குறையை]**

7. தொழில் முனைவர் _______ திட்டத்தினை தயாரிக்க வேண்டும்.
அ) வியாபாரத்
ஆ) இலாபத்
இ) நிதித்
ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[விடை: அ) வியாபார]**

**கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

1. அ) கணக்கியல் பணி
ஆ) மனித வள பணிகள்
இ) நிதிசார் பணி
ஈ) காசோலை **[விடை: ஈ) காசோலை]**

**காரணம்:** வாடிக்கையாளர் குறிப்பிட்ட வங்கியின் மீது விடுக்கும் ஆணை காசோலையாகும். மற்ற மூன்றும் தொழில் முனைவோரின் வணிகப் பணிகள் ஆகும்.

**கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?**

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | தன்னம்பிக்கை | - | மனிதனுக்கு அழகு |
| ஆ) | தொழில் முனைபவர் | - | புதுமை படைப்பாளர் |
| இ) | அகத்தொழில் முனைவோர் | - | செயல் முனைவோர் |
| ஈ) | பெண் தொழில் முனைவோர் | - | திட்டம் தீட்டல் |

**[விடை: ஈ) பெண் தொழில் முனைவோர் - திட்டம் தீட்டல்]**

**கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

1. கூற்று (A) : **பலதரப்பட்ட துறைகளின் தனிப்பட்ட செயல்பாடுகளை ஒன்றுபடுத்தி அவற்றை நிறும இலக்குகளை நோக்கி திருப்பிடும் செயலுக்கு ஒருங்கிணைப்பு என்று பெயர்.**
காரணம் (R) : **இதனைமகாபாரதத்தில்கிருட்டிணன் ஓட்டிய பல குதிரைகளை இழக்கும் இரத்தத்துடன் ஒப்பிடலாம்.**
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
இ) (A) சரி ஆனால் (R) தவறு
ஈ) (A) தவறு ஆனால் (R) சரி
**[விடை: அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்]**

## குறுவினாக்கள் 2 மதிப்பெண்கள்

1. **தொழில் முனைவு பொருள் தருக.**

தொழில் முனைவு என்ற செயல் பிரஞ்சு மொழி சொல். அம்மொழியில் இன்னிசை கச்சேரியை அல்லது மனமகிழ் கேளிக்கை நிகழ்வுகளை நடத்துபவரை செயல் முனைவோர்கள் என அழைத்தனர்.

2. **மகளிர் தொழில் முனைவோர் வரைவிலக்கணம் தருக.**

ஹீம் பீட்டர், புதினம் பேணும் அல்லது ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட பொருளை முன்மாதிரியாக கொண்டு அதே பொருளை உற்பத்தி செய்து வரும் மகளிரே மகளிர் தொழில் முனைபவர் என வரையறுக்கிறார்.


orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

12 ஆம் வகுப்பு.

# அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2021 விடைகளுடன்

## PART - III

[கால அளவு : 3.00 மணி நேரம்] **வணிகவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 90]

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. விளம்பரம் என்பது ஒரு __________ ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) முகவர் ஆ) அகவளங்கள் இ) புறத்திறனீட்டல் ஈ) புறவளங்கள்

2. மனிதவளம் என்பது ஒரு ________ சொத்து.
அ) நிலையான ஆ) கண்ணுக்கு புலனாகும்
இ) நடப்பு ஈ) கண்ணுக்கு புலனாகா

3. புதிய பொருளாதாரக் கொள்கை _______ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 2013 ஆ) 1980 இ) 2015 ஈ) 1991

4. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டினை உருவாக்கி வளர்த்தவர் _______.
அ) மேயோ ஆ) ஃபேயல் இ) ஜேக்கப் ஈ) டேலர்

5. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) ரால்ப் நாடர் ஆ) மகாத்மா காந்தி இ) ஜவஹர்லால் நேரு ஈ) ஜான் எப். கென்னடி

6. ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது _______ இயக்குநர்கள் இருக்க வேண்டும்.
அ) 3 ஆ) 12 இ) 2 ஈ) 7

7. நிரப்பப்படாத விண்ணப்பத்தின் நோக்கம் _______ பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காகும்.
அ) வினாப்பட்டியல் ஆ) நிறுமம் இ) போட்டியாளர்கள் ஈ) விண்ணப்பதாரர்

8. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) சொத்துரிமை மாற்றம் ஆ) விலை
இ) இரு தரப்பினர் ஈ) அனைத்தும்

9. கீழ் குறிப்பிட்டவைகளில் எது உற்பத்திக் காரணி?
அ) உழைப்பு ஆ) தொழில் முனைவு
இ) நிலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10. களச் சந்தை _______ அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
அ) ஒழுங்குமுறை ஆ) பொருட்கள் இ) காலம் ஈ) பரிவர்த்தனை

11. மேலாண்மை என்பது ஒரு _______.
அ) கலை மற்றும் அறிவியல் ஆ) கலை
இ) கலை அல்லது அறிவியல் ஈ) அறிவியல்



orders@surabooks.com PH:9600175757 / 8124301000

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



12. ________ நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது.
அ) பணியமர்த்துதல் ஆ) ஒருங்கிணைத்தல்
இ) ஒழுங்கமைத்தல் ஈ) கட்டுப்படுத்துதல்

13. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை __________.
அ) பண்டமாற்று முறை ஆ) முற்றுரிமை முறை
இ) தற்சார்பு உற்பத்தி ஈ) பணத்திற்கு மாற்றுதல்

14. மாற்று முறை ஆவணச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
அ) 1994 ஆ) 1981 இ) 1818 ஈ) 1881

15. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்?
அ) மூன்று முறை ஆ) ஒரே ஒரு முறை இ) பல முறை ஈ) இரண்டு முறை

16. முந்தைய பங்குதாரர்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் __________.
அ) உரிமைப் பங்குகள் ஆ) ஊக்கப் பங்குகள்
இ) முன்னுரிமைப் பங்குகள் ஈ) சாதாரணப் பங்குகள்

17. விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை பங்குச் சந்தைக்காக ஏற்படுத்தித் தரும் அமைப்பு __________ ஆகும்.
அ) செபி ஆ) ரிசர்வ் வங்கி இ) பம்பாய் பங்கு சந்தை ஈ) மத்திய அரசு

18. பணச்சந்தையில் இடர் என்பது __________.
அ) குறைந்த கடன் மற்றும் சந்தை இடர் ஆ) அதிகம்
இ) நடுத்தர இடர் ஈ) சந்தை இடர்

19. தன் வணிகர் பங்குச் சந்தையில் ஈடுபடுவது :
அ) மற்ற தரகர்களுக்காக ஆ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக
இ) மற்ற உறுப்பினர்களுக்காக ஈ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக

20. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் __________.
அ) நுகர்வோர் திருப்தி ஆ) அதிகமான இலாபம்
இ) சமுதாயத்திற்கு சேவை ஈ) குறைவான இலாபம்

## பகுதி - II

**குறிப்பு :** **ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் **30-வது** வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். **7 × 2 = 14**

21. தரகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
22. பதவி உயர்வு என்றால் என்ன?
23. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
24. மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?
25. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் சிக்கல்களில் ஏதேனும் இரண்டினை எழுதுக.
26. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
27. முழு நேர இயக்குநர் என்பவர் யார்?
28. சந்தை என்றால் என்ன?
29. இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?
30. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?

orders@surabooks.com PH:9600175757 / 8124301000
Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com

www.kalvinesan.com
https://t.me/kalvinesan

SURA'S

12TH STD SCHOOL GUIDES

2022-23 EDITION




Call @
9600175757
8124301000
orders@surabooks.com

Buy Online @
surabooks.com

Please Send your Materials, Question Papers & Answer Keys to Email : kalvinesan.com@gmail.com